ഉദ്ബോധകൻ

പുസ്തകം 10 ലക്കം -7

(ചിങ്ങം 1937)

X
ON211, N27 S1Y
N87. 10.7
186959

1103

REGD NO. M· 3460.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைக்கினி தோ

MAR 1937



# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு க௦. பலவான்குடி தாது—மாசி திங்கள் எ.


| எண். | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| 1. | நற்றமிழ் நூல்கள் ... | 157 |
| 2. | மதிப்புரை மஞ்சரி ... | 158 |
| 3. | தமிழ்மொழி ... | 159 |
| 4 | இந்தியர் ஜனத்தொகை ... | ,, |
| 5. | ஆரம்ப ஆசிரியர்களின் சொந்தப்படி ... | 160 |
| 6. | தீண்டாதார் ஆலயப் பிரவேச சத்தடை ... | 161 |
| 7. | வைணவக் காந்தி ... | 169 |
| 8. | காந்தியும் 'சுக்கா'ரும் ... | 170 |
| 9. | குச்சுக்காரி வீடுகளிற் காந்தி ... | ,, |
| 10. | வந்தே மாதரம் ... | 172 |
| 11. | தமிழ் நாட்டு பெண்மணிகள் ... | 173 |
| 12. | இந்திய ராஜப்பிரதிநிதிக்கு வரவேற்புப் பத்திரம் | 175 |
| 13. | சென்னை மாகாண ஸநாதனதர்ம மகாநாடு | 177 |
| 14. | மெய்கண்டார் ... | 181 |
| 15. | சுலோக பஞ்சக விஷயம் | (81—84) |


ஆசிரியர்:— ராம. த. ராம. இராமசாமி செட்டியார், பலவான்குடி.

# செய்தித்திரட்டு.

உள்ளூர்:—செங்கமலநாயகிவெள்ளிரிஷபவாகனத்தில்திவ்யாலங்காரத்துடன் மாசி ருவ சிறப்பாகத் திருப்பவனி கொண்டருளினள். இதனை இனிது நடாத்திய நேமத்தான்பட்டி செ. கரு. சித. குடும்பத்தினர், உள்ளூர் வெளியூர் அன்பர் பலர்க்கும் நல்விருந்தருத்தி யுபசரித்தனர்.

குமார விநாயகர் திருக்கோயிலில் மாசி கூஉ வளர்பிறைச் சதுர்த்தசியில் நடராஜாபிடேகம் நடைபெற்றது.

வயல்களில் கதிர்கள் நன்கு விளைந்து பெரும்பாகம் ஒப்படியாகிவிட்டன.

போனபிள்ளை வந்தது:— ஆத்தன்குடி முத்துப்பட்டணம் திருவாளர் சி. ராம. நாச்சியப்ப செட்டியாரவர்களின் மூத்தமகனுடைய ஏழுவயதுட் பிள்ளையைத் திருடிச்சென்ற கள்வர் இரண்டு வாரங் கிரமித்துப் பிள்ளையை உயிருடன் விட்டுவிட்டார்கள். பிள்ளை வீடு வந்து சேர்ந்தது. இந்நிகழ்ச்சிக்குக் காரணம் விரோதமோ! பணத்தாசையோ!!

குன்றக்குடி:—அமரர்த்தாங்கும் குமரநாயகன்பங்குனி சஉமுதல்யகூஉவரை உத்திரத் திருவிழாக் கொண்டருளுவர். கஉஉ தேர்த்திருவிழாவும் கூஉ மயி லாடும்பாறை மண்டபப்படியுமாம்.

கண்டனூர்:— மஹான் பரமாம்சர் பேரால் இவ்வூரில் நிறுவப்பெற்றுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தின் முதலாவது ஆண்டுவிழாவானது பரமாம்சரின் நூற்றியொன்ருவது ஆண்டு விழாவுடன் கூடி இம்மதி கஉஉ முற்பகல் பிற்பகல் களில் திருவாளர், சி. ராம. சொ. அவர்கள்மாளிகையில் திருவையாறு உயர்திரு, தி. அ மு. சிதம்பர சுவாமிகள் தலைமையில் சிறந்த விரிவுரைகளுடன் இனிது நடைபெற்றது.

தேவகோட்டை:— திருவாளர், அள. சுப. பழ. சுப்பிரமணியன் செட்டியா ரவர்கள் தங்கள் மாளிகைக்கண் தை உகூஉ பழநியாண்டவர் பூஜை நடத்திச் சிறப்பாக அன்னதானம் செய்தார்கள்.

காரைக்குடி:— அளவையுள்ள, இந்தியன் ஓவர்சீஸ் பாங்கின் கிளையொன்று 1937 பிப்ரவரி 10உ கல்லுக்கட்டிக் கீழ்கரை T. S. 3/281 எண்ணுள்ள கட்டிடத்தில் திறப்புவிழாச் செய்யப்பெற்று நடந்துவருகிறது.

திருச்செங்கோடு:— கஉ தொடங்கி தை கஉவரை உள்ளூர் அன்பர்களால் திராவிடவேதபாராயணக்கோஷ்டிகள் ஆறுசெவ்வியின்நடைபெற்றுஉஉ ஆறுமா முகவர்க்கு அபிடேகாராதனங்கள் செய்யப்பெற்றன.

செங்கோட்டு வேலர் திருச்சந்நிதியில் திருமஞ்சனமாதிய கைங்கர்யத்துடன் மைசூர் மகாராஜா அவர்களின்நித்யநைவேத்தியக் கட்டளையையும் இருபதாண்டு களாகப் பக்திபூர்வகமாக ஆகம முறைப்படி நடாத்திவந்த தி. வா. சிவராமபண் டிதரவர்கள் மார்கழி உகூஉவரை நாககிரியில் சிவகைங்கரியங்களைச் சீர்பெற நடத்தி உசஉ சிவகதியுற்றூர். இவருக்கு மூன்று ஆண் மக்களும் ஒரு பெண் மகளும் இருக்கின்றனர். இவர் செய்துவந்த தெய்வ கைங்கர்யம் இவரின் வார்சுகளுக்கே உரித்தாக தேவஸ்தானத்தாரும் ஆதிசைவ மகாசபையாரும் தீர்மானித்துள்ளார்கள்.

OFFICE OF THE REGISTRAR ... 2-MAR 1937 ... MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினிதோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.


| ஆண்டு ௰ | தாது—மாசி 1937—மார்ச்சு | திங்கள் ௭. |
|---|---|---|


உடையா னுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## நற்றமிழ் நூல்கள்.

மக்களை நன்மக்களாக்குவதற்கு நற்பயன் பெறச்செய்வதற்கு உரிய சாதனம் நன்னெறி போதிக்கும் நூல்களே. ஒளி பொருந் திய இருவிழிகள் முகத்திலிருப்பினும் மேலே சூரியனது தோற்ற மின்றுயின் விரும்புகின்ற உலகப் பொருள்களைக் காண்பரிதா பாறுபோல பெருந்திருவும் அறிவும் பெற்றிருப்பினும் நுண்ணிய நூற்கேள்வியைப் பெருராயின் திருவை வளர்க்கும் புண்ணியம் இன்னது; தீமை பயக்கும் பாவம் இன்னது; இம்மை மறுமை களிற் பெரும்பேறு இன்னது; பற்றுக்களை முற்றத் துறந்து பேரின்ப வீட்டையும் வழி இன்னது எனத் தெரிதற்கியலாவாக லின் நூன்முறை தெரிந்து சீலத்தொழுகலே சாலச் சிறந்ததாம். வடமொழி, தென்மொழிகளில் பெரியார்கள் யாத்துள்ள நூல்கள் அளப்பில. அனைத்தும் நமக்கு மூலதனமாகவுள்ளவைகள். மூல தனத்தை இழந்துவிடாமல் போற்றி வைத்துக்கொள்ளவேண்டு மென்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். சென்னைமகாமகோபாத் தியாய, தாக்ஷிணாத்ய கலாநிதி, டாக்டர் உயர்திரு, உ. வே. சாமி நாதையரவர்கள் தம்இளமை தொடங்கி ஐம்பதுவருடங்களாக செம் பொருள் செறிந்துள்ளசெந்தமிழ்நூல்கள்பலவற்றைத்தேடியாய்ந்து பதவுரை, பொழிப்புரை, குறிப்புரைகளெழுதிவெளியிட்டுள்ளார்கள். இன்னும் பலநூல்களை ஒருமாதத்திற்குஒன்றாகவெளியிடவெண்ணி யுள்ளார்கள். அதைப் பற்றி வெளிவந்துள்ள விளம்பரத்தை இச் சிவநேசன் செய்திப்பகுதியில் காட்டியிருக்கின்றோம். அதனைஅங்கீ கரிக்கும் அன்பர்கள் 1937 மார்ச்சு 15உக்குள் முற்பணமாக ஒரு ரூபாவீதம் அனுப்பித் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண் டால் ஈசுவரகிருபையால் ஈசுவரவருடம் சித்திரைமாதமுதல் இனிது வருதற்கு ஏதுவாகும்.

186959

மெய்யன்பர்களே! பெரியோர்களே!! தமிழ் மக்களாகிய நாம் தமிழைவளர்க்கவும் பாதுகாக்கவும் கடமைப்பட்டிருக்கிறோம். நாட்டுமொழிபோற்றிஞல்தான் நாட்டுப்பயிர் செழித்து நாட்டுக்கு நன்மையுண்டாகு மென்பதறிவீர்கள்! மொழிக்கு மொழி தித்திக்கும் தீங்கரும்பன்ன நந்தமிழ் மொழி மிக்க ஏற்றமுடையது; பெரியார் பலரும் பாராட்டிப் போற்றியது. சைவசமயபரமாசாரியராகிய திருஞானசம்பந்தப் பெருமானுரை சுந்தரமூர்த்தி சுவாமிகள் நற்றமிழ்வல்லஞானசம்பந்தரென்றூர் சம்பந்தரும் தேவாரத்திருக்கடைக் காப்புகளில் நற்றமிழ் என்பதாதி சிறப்புக்களால் தமிழுக்கு ஏற்றம் அருளியுள்ளார். நந்தமிழுக்கநுகூலமாகியநற்றமிழ் நூல்கள் பலவும் வெளிவரின் அவைகளில் பொதிந்துள்ள அரும் பெரும் பொருள்கள்யாவும் நமக்கு நல்லுணர்ச்சியைத் தந்து நற்பயன் விளைவிக்குமாகையால் நற்றமிழ் நூல்களைக் கற்றறி மக்கள் முற்றும் ஆதரிக்க வேண்டுதும்.

## மதிப்புரை மஞ்சரி.

ஞானசம்பந்தர் நான்மணிமாலையும் திருச்செந்திலிருபாவிருபஃதும்:—தேவகோட்டை, திருவாளர், பாலகவி, வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியாரவர்களால் தமது 21, 22ம் ஆண்டு நிறைவுகளின் அடையாளமாக இயற்றப்பெற்றவை. சென்னை மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் முதலானவர்களின் சிறப்புப்பாயிரங்களுடன் உரிய முறைபால் யாத்த இந்நூல்கள் சிவமணங் கமழ்ந்து திகழ்கின்றன. ஆண்டிற்கொரு நூலாக்கிவரும் பாவலராகிய பாலகவியார் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டுகள் வாழ்ந்து பல நூல்களைப் பார் புகழுவுதவுவராக! பாலறுவாயர் திருவருள்பாலிப்பாராக!!

ஆத்திசூடி கொன்றைவேந்தன் மூலம்:— தேவகோட்டை திருவாளர், பாலகவி, வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியாரவர்களால் பதிப்பித்து மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பெறுகிறது.

இந்துசாதனம்:– யாழ்ப்பாணத்திலிருந்து நாற்பதெட்டாண்டுகளாக சோமவாரத்திலும் குருவாரத்திலும் வெளிவரும் புதினத்தாள். மெய்ம்மையாகிய சைவத்தைப் பரவச் செய்வது. இதன் ஆசிரியர் திருவாளர், S. அட்சயலிங்கம்அவர்கள். இதனை வண்ணார் பண்ணை, சைவபரிபாலனசபையாருக்கு எழுதிப்பெறலாம்.

சித்தாந்தம்:— சைவசித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு அதன் பத்தாவதாண்டு இரண்டாந்திங்களாகிய 1937 பிப்ரவரி முதல் திருவாளர், அ. சோமசுந்தரம் செட்டியார் எம். ஏ. அவர்களை ஆசிரியராகக்கொண்டு சிறந்தமுறையில் வெளிவருகிறது. திருவருளகம் 22 A கல்லுக்காரத்தெரு, மைலாப்பூர், சென்னைக்கு எழுதிப்[illegible] ரூ 2—0—0.

# தமிழ் மொழி.

(கஞ்சிபுரம், போர்டு உயர்தர ஆண்பாடசாலைத் தலைமைஆசிரியர் திரு, S. V. கோதண்டராமையரவர்கள்)

தமிழ் என்பதன் செம்பொருள் இனிமை எனப்படும்.

இவ்வுலகத்தில் வழங்கும் மொழிகளில் தமிழ் மொழி ஒன்றே தனிமொழியாக நம் தாய்மொழியாக வுள்ளது. அமிழ்தனைய தமிழ் மொழியாம் தாய் மொழியைப் புறக்கணித்தல் தமிழ் மக்களுக்கு அடாது. இலக்கணவமைதியுடன் இலக்கியச்சுவைநிரம்பிய தமிழைக் கற்பதால் அறிவுபெருகி தேசபக்தி உண்டாகிறது. இத்தீந்தமிழ் மொழியின்சிறப்பு ஆயிரக்கணக்கானமைல்களுக்கப்பாலுள்ள அந்நிய நாட்டாராலும்போற்றப்படுகிறது. இன்னகாலத்திற்றான் உண்டானதென்று வரையறுத்தற் கியலாத நம் பழந்தமிழ்ப் பயிற்சியால் நம் முன்னோரின் சிறந்த ஒழுக்கங்களையும் சீரிய மனப்பான்மையையும் அறிய ஏதுவாகிறது.

தற்போது கல்விச்சாலைகளிலும் தாய்மொழியிலேயே சகல பாடங்களையும் கற்கவேண்டும் என்கிற நிலைமை ஏற்பட்டு அனேக பாடசாலைகளில் S. S. L. C. பரிசைஷகூட தமிழ் மொழியிலே விடை பெழுதப்படுகிறது. சீக்கிரத்தில் "கட்டாயமாக" எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் எல்லாப்பாடங்களும் தாய்மொழியிலேயே கற்கவேண்டும் என்ற நிபந்தனையைக் காருண்ய கவர்ன்மெண்டார் செய்யக்கூடும்.

ஒவ்வொருவரும் நந்தமிழ் மொழியை முதன்மையாகக் கொண்டு மேலும் மேலும் விருத்திசெய்யவேண்டுகிறேன்.

## இந்தியர் ஜனத்தொகை.

இந்தியாவில் ஜனத்தொகை மிக அதிகமாகப் பரவிவருகிறது. இப்போது 37 கோடி. இன்னும் 5, 6, வருஷங்களுக்குள் 40 கோடியாகப் பெருகிவிடும். பிரிட்டிஷ் இந்தியாவில் 23 கோடியே 20 லட்சம் எக்கர் பயிரிடப்படும் நிலமாக இருக்கிறது. ஆனல் மொத்தமுள்ள 66 கோடியே 70 லட்சம் எக்கர் நிலமும் பயிரிடப்படுவதாக இருந்தாலும் ஆளுக்கு ஒன்றரை எக்காவீதந்தான் ஆகும். இதிலிருந்து ஜனத்தொகைக்குப் போதுமான உணவு அகப்படாது. நிலங்களில் பலபோகம் பயிர்கள் செய்யும் பழக்கத்தைப் புதிய முறைகளில் கையாள இந்திய விவசாயிகளால் ஆகாது. ஜனத்தொகைப் பெருக்கும் பொருளாதார அபிவிருத்தியும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டதாதலால் இதைப்பற்றி இத்தேச மக்கள் கவனம் செலுத்தவேண்டும்.

ஜனப்பெருக்கைத் தடுக்க பழைய காலத்து விவாகமுறைகளையும், பெரியோர்கள் செய்த சாஸ்திரங்களையும் அனுஷ்டித்து பெரியோர்களின் கட்டளைக்கு அடங்கி நடந்தால் அதிக விருத்தியும், மரணமும் நேரிடாது.

## தென்னாற்காடு ஜில்லா போர்டு

# ஆரம்ப ஆசிரியர்களின் சொந்தப்படி.

(மழுவந்தாங்கல் திரு, A. முத்தைய பிள்ளை அவர்கள்)

"தியாகி" பத்திரிகையில் 4—10—36ல் பிரசுரமானபடி சில குறைகளை எடுத்துச்சொல்கிறேன். கவர்ன்மெண்டு உத்திரவு நெ. 749 L & M 25—2—35 தேதியுள்ளபடி ஆரம்பஆசிரியர்களுக்கு செகண்டரி, ஹையர், லோயர், கிரேடுகளுக்கு ஸ்கேல் வைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் சொந்தப்படி கொடுக்க வேண்டுமென்ற உத்திரவுக்கு இணங்காமல் சர்வீஸ்படி கொடுத்தும் பிறகு காருண்யகவர்ன்மெண்டார், ஆசிரியராகியவர்கள் கோரிக்கையின்பேரில் ஷை போர்டார் அவர்களால் 1-7-36முதல் உபாத்தியாயர்களுக்குச் சொந்தப்படி கொடுக்கப்பட்டது.

இப்படிக் கொடுத்தும் பாரபக்ஷம் வைத்துக்கொடுத்திருக்கிறார்களே ஒழிய வேறில்லை. எடுகேஷன் கமிட்டி சிபார்சுகளைப் போர்டார் அங்கீகரித்துவிட்டார்கள். சில உபாத்தியாயர்களுக்கு ஸர்வீஸ்கள் ஒன்றாக இருந்தும் சொந்தப்படி வித்தியாசம் ஒன்றாக இருந்தும் ஒருவருக்கு சொந்தப்படியில் குறைத்தும் மற்றொருவருக்கு முழுமையும் கொடுத்திருப்பது அநீதி. ஸர்க்கார் உத்திரவுப்படி பாரபக்ஷமில்லாமல் 30-6-34ல் என்ன சம்பளம் வாங்கினார்களோ அதைக் கொடுத்திருந்தால் ஷை போர்டார் வித்தியாசம் காட்டவில்லை என்னலாம். தற்போது பிரஸிடெண்டும் ஏற்கனவேயிருந்த பிரஸிடெண்டு உத்தியோகமுறையில் ஒன்றே. ஒருவர் கொடுத்ததைமற்றொருவர் அதிகம் என்று சொல்வதுநியாயமில்லை.

ஷை G. O. உத்திரவில் லேபர்ஸ்கூல், பிஷரிஸ் ஸ்கூல் உபாத்தியாயர்களுக்கு மாக்ஸிமத்திற்குமேல்வாங்கினாலும் அதைக்குறைக்கக்கூடாது என்று கண்டித்திருக்கிறது. அதன் நோக்கம் மாக்ஸிமத்திற்கு உள்பட்டு வாங்குபவர்களுக்கு வரும் சொந்தப்படியை குறைக்கக்கூடாது என்பது.

அப்படியிருக்க மாக்மஸித்திற்குமேல் வாங்கும் ஆசிரியருக்கு முழுமையும், சிலருக்குக் குறைத்தும் மாக்ஸிமத்திற்குக் குறைந்து வாங்கும் சிலருக்கு முழுமையும், சிலருக்குக் குறைத்தும் கொடுத்திருப்பது சாமி வரங்கொடுத்தும் பூசாரி வரங்கொடுப்பது கஷ்டம் போல் இருக்கிறது. ஆகையால் காருண்யகவர்ன்மெண்டார் அவர்களும், கடலூர், விழுப்புரம் ஜில்லாபோர்டுகளும் இதைக்கவனித்து 30—6—34 தேதியுள்ள சம்பளத்தை தஞ்சாவூர், வடாற்காடு ஜில்லாபோர்டுகளில் வித்தியாசமில்லாமல் கொடுத்தாற்போல் கொடுக்குமாறு கோரப்படுகிறது.



# தீண்டாதார் ஆலயப் பிரவேசத் தடை.

(சர்வமதாதீத சுத்தாத்வைத சத்தியதரிசன சித்தாந்த சைவப் பிரசாரகர் சென்னை, திரு, மா. நீலகண்ட சித்தாந்தியார் அவர்கள்.)

(10-ம் ஆண்டு 140-ம் பக்கத்தொடர்ச்சி)

அதனாலே அநேக வைதீகர்கள் மனச்சங்கடமுற்று இராப்பகல் உறக்கமற்று இனி யாது சம்பவிக்குமோ, கோயில்கள் என்னகதியாகுமோ என்று ஏங்கச் செய்வதாற் சந்தேகமின்றிப் பிறரை ஹிம்சிப்பதும் பெருங்கலகஞ் செய்வதுமாகிறது. அநேக இடங்களில் அதாவது சிதம்பர முதலான இடங்களிற் கல்லெறிதல், குருவாயூரில் ஜாமொரின் தலை அராபிக்கடலிற் போய்விழுமெனப்பிரசங்கித்தல், ஸ்திரீகள், பிராசாரர்களை விளக்குமாற்றாலடித்தல், முதலியவற்றிற்குக்காந்தி காரணபூதராகின்றனர். ஆகவே சட்டமறுப்பை யனுமதியாத அரசாங்கத்தார் இந்தப் பெருஞ் சட்டமறுப்பியக்கத்திற்கும் பிரத்தியட்ச கலகத்திற்கும் எவ்வாறு இடந்தரலாம்? ஷவுகத்அலி காந்தியோடுபேச அனுமதித்தால் தங்களது அரசாங்கத்திற்கே கஷ்டம் வருமெனச் சந்தேகித்தவர்கள் சிறையிலடைப்பட்ட அவருக்குத் தீண்டாமை, ஆலயப்பிரவேச விஷயமாய் இரண்டு காரியதரிசிகளையமைத்துப் பலரும் பேச அநுமதித்தது முழுமோசமாகவே யிருக்கிறது. இரட்டைவிஷயங்கட்கு இரட்டைக்காரியதரிசிகளோ? உள்ளுக்குள்ளேயே கலகம் பலக்கட்டும் என்கிற தந்திரமோ? ஆகவே கலகம் பிரத்தியட்சமாய் விட்டதால் இனியேனும் அரசாங்கத்தார் அத்தகைய விஷயத்தை யநுமதியாமலிருப்பாராக; காந்தியைப் போய்ப் பார்க்க இனி ஒருவரையும் விடாமலிருப்பாராக. இல்லாவிடிற் கவர்ன்மெண்டே கலகத்திற்குக் காரணமென்றேற்பட்டுவிடுகின்றது. மேலுந் தன்னைத்தான் மாய்த்துக்கொள்வதும் முற்காட்டிய சுலோகப்படி ஹிம்ஸையாகிறதாதலால் தற்கொலை (Cuicide)க்கு வேண்டிய தண்டனையும் அவரடைய வேண்டியதே.

இனி மகாத்மா என்கிற பட்டம் (8, 15லும்,) (9, 13)லும். (11-12)லும் (11-20, 37 6, 50,)லும் (18-4)லும் முறையே உலகப்பற்றற்ற எல்லாங் கடந்த ஞானிகட்கும், (24) தத்துவம் வரைக்கும் வியாபித்தவிஷ்ணுவின் அவதாரமாகிய கண்ணனுக்கும் அவருடைய உபதேசம் விசுவரூப தெரிசனமிவற்றை நேரே யனுபவித்த அர்ச்சுனனுக்கும் பிரயோகிக்கப் படுவதாற் கண்ணனைப் பின்பற்றுவேன் என்கிற காந்தியும் மஹாத்மா என்கிற பெரும் பாரத்தைச் சுமத்தலுங் கண்ணனையும் கீதையையுந் தூஷித்ததாகிறது. சக்கரவர்த்தி யென்று எல்லோரும் பட்டம் வைத்துக்

கொள்ளலாமோ? கீதை முற்றிலும் இவரைக் கைவிட்டதாகலின் மஹாத்மா என்கிற பட்டம் சேரிக்காது. அப்பர் சுந்தரர் சம்பந்தர் மாணிக்கவாசகரைப்போற் செத்தவரை யெழுப்புவரா? பதிகத்தாற் சாவச் செய்வரா! அரசர்களை யடிமைகளாக்கிக் கொள்வரா? ஊமையைப் பேச வைப்பரா? இவருடைய வயிற்றிலேற்பட்ட அதிக மாம்சம், வலக்கை நோக்காடு, சுரம் முதலியவற்றிற்கே பத்து டாக்டர்கள் வேண்டியதாயிருக்கிறதே. என் செய்வது! மேலும் (6-9)ல் "எவன் சிநேகரையும், சத்துருக்களையும், பந்துக்களையும், அந்நியரையும், உத்தமரையும், பாபியையுஞ்சமமாய்ப் பார்க்கிறானோ அவன் சிரேஷ்டன்" எனக்கூறப்படுகிறது. அச்சுலோகப்பிரகாரம் அந்நியர்களாகிய ஆங்கிலேயரிடம் அவர்கள் என்ன கொடுமை செய்தாலுந் துவேஷிக்காது ஊரைவிட்டோட்டப் பார்க்காது சீமைத் துணிகளை நெருப்பு வைத்துக் கொளுத்தாது வைதீகர்களையும் வாசித்தவர்களையும் பாமரர்களென்று தூஷிக்காதன்றோ இவர் இருத்தல் வேண்டும்! அக்கண்ணன் கட்டளைக்கே இவர் கீழ்ப்படியவில்லையே. நேர் விரோதியாக வன்றோ இருக்கின்றனர்! ஆதலால் மகாத்மா என்கிற பட்டம் எவ்வாறு புனையலாம்? "யான் புனைந்து கொள்ளவில்லை; பிறர் தூக்கி என் தலைமேல் வைத்தார்கள்; சுமக்க இஷ்டமின்றியே சுமக்கிறேன்" என்பராயின் அப்போது சாஸ்திர விரோதமான விஷயத்திற் கஞ்சாது உண்ணாவிரதம் பூண்பவர் "இனி யாரும் என்னை மகாத்மா என்று அழைத்தல் கூடாது; அழைத்தால் உண்ணாவிரதமிருப்பேன்" என்று சொல்லிவிட வேண்டும். அதற்கு ஒரு உண்ணாவிரதமும் ஆட்சேபனையுமேற்படாததால் இவருக்கும் மகாத்மா என்கிற பட்டம் பூண ஆசையாக இருக்கிறதென்றேற்படுகிறது. (10-11-32)ல் வெளியான மித்திரனில் "என்னைப் போன்ற மகாத்மாக்கள்" என்று காந்தியே தன்னைக் கூறிக்கொள்வதாலும் அது நன்கு வலியுறுத்தப்படும். மேலும் இவர் "என் இயக்கத்தை நிறுத்தப் 1000000 பேர் பட்டினி கிடப்பினும் நான் அதைவிடமுடியாது" என்று 17—22—32ல் கூறுவதாற் பெரும் பிடிவாதக்காரரென்று நன்கு தொனிக்கிறது. இக்கூற்றுஞ் சாதுக்களை ஹிம்சிக்கிறது. "எனக்குக் கடவுளாஞ்ஞையிட்டார் கடவுளாஞ்ஞையிட்டார்" எனப் பன்முறை ஏமாற்றுகிறார். (18—11—32)ல் பத்திரிகை முதலியவற்றைப் பார்க்கவும். அது உண்மையானால் இவரிஷ்டப்படிவராத வைதீகர்களையும், வெள்ளையர்களையும் கடவுளிடம் நேரேபேசி அடக்கிவிடுகிறதுதானே? சமுத்திர கலச நியாயமாகச் சிலவற்றையே தொட்டுக்கொண்டு முடித்தோம். பிறவற்றையும் புத்திமான்கள் ஆய்ந்தோய்ந்தறிவார்களாக.



(மெய்கண்டார், ஹரதத்தர்), நீலகண்டர், சங்கரர், இராமநுஜர், மத்துவர் முதலியவர்களே சிற்சில விஷயத்திற் பேதமுறுவரென்றால் வேதாகமவிரோத விஷயமாகிய தீண்டாதாராலயப்பிரவேசம், தீண்டுதல் முதலியவற்றை அறிவாளிகள் எவ்வாறு சகிப்பர்? உலகமெல்லாம் அவரைப்போற்றுகிறதேயென்றால் உலகம் என்பது சாஸ்திரக்கல்வியுடைய உயர்ந்தோர்களையே குறிக்குமாதலின் உலகந் தூற்றுகிறதேயன்றிப் போற்றவில்லை. சாஸ்திர சம்பிரதாயமறியாதார் கும்பு கூடிக் கூச்சலிட்டால் அதை ஏற்கமுடியாது. மேலும் விருட்டி வண்டிக்காரனை நீதிபதியாக அமர்த்தி ஐயாயிரம்ரூபாய் சம்பளங் கொடுக்கவென்றால் அவன் சட்ட விஷயம் வாசிக்கவில்லை யென்பர். கவர்னராய் அமர்த்துங்களென்றால் முழுமூடன் அரசியல்விஷயந்தெரியாதவனென்பர். குருடனுங் குஷ்டரோகியுமாகிய ஒருவனை மெடிகல் ஆபீசராக அமர்த்துங்களென்றாற் குருட்டுக் கண்ணோடும் குஷ்டரோகம் பிடித்த கையோடுங் கண்ட விடத்திற் கத்தியாற் கூறுபோட்டுத் துண்டந் துண்டமாக்கி விடுவனே யென்பர்? அவ்வாறாயின் சாஸ்திரக் கல்வியற்றவர்கள் சட்டசபையில் வைதீகரை யெல்லாங் கட்டுப்படுத்த சட்டங் கொண்டுவர யோக்கியதையுடையரன்றல்லவர்! ஆகவே அரசாங்கத்தாரும் அதை அனுமதிக்கதக்கதன்று. மேலும், யோகிகளெல்லாம் ஜன சந்தடியற்ற ஏகாந்த ஸ்தானத்திற் செல்லவேண்டும். கூட்டங் கூடாது" என்று கண்ணன் பலவிடங்களிற் போதித்தலால் தீண்டாமையையே பழக வேண்டும் எனக் கூறினாராயிற்று. கண்ணன் கட்டளைப்படியே அநேகர் இருக்கிறவிடந்தெரியாமற் பக்திசெய்து வருகின்றனர். காந்தியோ அதற்கு நேர்விரோதமாய்த் தீண்டாதார், மகம்மதியர், ஐரோப்பிய ஸ்திரீ முதலாயினரைத் தீண்டி வளர்த்து எல்லோரையுந் தன் வசப்படுத்திக் கொண்டு பெருங் கூட்டம் போடுகிறார். ஆகையினாலேயே சாஸ்திர நுணுக்கமறியாதாரெல்லாம் அவரைப் போற்றுகின்றனர். உண்மையறிந்த வைதீகர்களோ தூற்றுகின்றனர். அவர் கூறும் ஹரியையோ உலகத்தாரெல்லாம் போற்றவில்லை. அதனாற் கண்ணன் இவரைவிடக் கீழ்ப்பட்டவரா? அவ்வாறு சொல்லநாவெழுமா?

ஹரிஜனமென்று புதுப்பெயர்கொடுத்தால்ஹரிஜனமல்லாதார்யாரே? பழைய நிகண்டுகளையெல்லாந் தள்ளிவிட்டுக் காந்தி நிகண்டு ஒன்றும் ஆதித்திராவிடர் என்பதற்குத் தியாகராய நிகண்டு ஒன்றும் ஏற்படுத்தல் வேண்டும் போலும்! ஆனால் அவர்களிருவருக்கும் நிகண்டுபாடச் சாதுரியமின்றே யென்செய்வது! முற்கூறிய பல நிகண்டுகளைக் கற்று அவற்றிற்குக் கட்டுப்பட்டால் இந்தப் புது விபரீதம் ஏற்படாது. பழைய காலத்திலிருந்த திராவிடர் என்று தியாகராயர் கண்டுபிடித்துவிட்டதும் வெகு

ஆச்சரியம். சாஸ்திரங்கள்தானே பெருஞ் சரித்திரம். சாமானியர்களெழுதியது உண்மைச் சரித்திரமாகுமா? சிலவேளைகளில் அரசனது தயவுக்கோ தண்டனைக்கோ பயந்தோ அன்றிப் பணம் பெரும்பொருட்டோ அவனைப் புகழ்ந்து சரித்திரத்தை மாற்றி யெழுதவுங் கூடும். கடவுளும் வியாசரும் பராசரும் சூதரும் பிற ரிஷிகளும் அறுபான்மும்மைநாயன்மார்களும் பிறருக்கடங்கினவரன்று. துறவிக்கு வேந்தன் துரும்பன்றோ? ஆகவே அவர்களது அகச்சான்றுகளே எமக்குப் பிரமாணம் என்பதோடு இவ்விஷயத்தினைப் பூர்த்திசெய்து மேற் செல்லுதும்.

முதலிற்றீண்டாமைசாஸ்திரத்திலில்லையென்பது அவர்களதுவீண்கூச்சல். தீண்டாமைக்குச் சாத்திரங் காட்டிவிட்டபிறகு ஆலயப்பிரவேசத்தடைக்குஆகமத்தில் ஆதாரமில்லையென்றகூச்சல். ஆகமப்பிரமாணங்காட்டிவிட்ட பிறகு சண்டாளர் என்பது பறையரைக் குறிக்காதென்ற கூச்சல். தமிழ் நிகண்டு அகராதிகளாலும் யாம் வஜ்ஜிர ஸ்தம்பம்போல் ஸ்தாபித்துவிட்டபிறகும் ஏதுகூறினும் ஒத்துக்கொள்ளோம் என்ற பிடிவாதக்கூச்சல் போலும். இப்போது யார் பிடிவாதக்காரர் என்பது அறிஞரறியத்தக்கது.

அக்காலத்துச் சமணர் அனல்வாதம் புனல்வாதத்தில் திருஞானசம்பந்தரிடந்தோற்றார். இக்காலத்துச் சமணர் சாஸ்திரவாதஞ் செய்யத்திறமையற்றே விதண்டாவாதஞ் செய்து தோல்வித் தானமடைகிறார் கண்டீர்! ஆகவே இவர்களும் எவ்வாறு கோயிலில் நுழையலாம்!

## தேவர்களுள்ளும் நான்கு ஜாதிக ளுண்டென்பது.

"நீவிர் (சிவபெருமான்) தேவர்களுள்ளே பிராமணர் என்று சாமவேதிய சதபதப்பிராமணத்தினும்,

(தேவர்களுக்குள்ளே) சிவபெருமான் பிராமணர். விஷ்ணு க்ஷத்திரியர். பிரம்மா வைசியர். இந்திரன் சூத்திரன் என்று புராணங்களிலும்,

பிராமணர்களுக்குச் சிவபிரானும் க்ஷத்திரியர்களுக்கு விஸ்ணுவும் வைசியர்ளுக்குப் பிரமாவும் சூத்திரர்களுக்கு இந்திரனுந் தெய்வம் என்று ஸ்மிருதியினும் ஸ்காந்தத்தினுங் கூறப்படுகின்றமையானும், 'வேதியா' 'அந்தணா', 'மறையோனே', என்று திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் சுந்தரரும் அளவு கடந்து அடிக்கடி தமிழ்வேதமாகிய தேவாரத்து வாய்நிரம்ப அருணாத வொலியால் ஸ்துதிக்கின்றமையானும் அவ்வாறே ஸ்ரீமத் மணிவாசகப் பிரபுவும் திருவாசகத்தில் "காப்பாய்......முதல்வா முன்னே யென்னையாண்ட பார்ப்பானே யெம்பரமாவென்று பாடிப்பாடிப் பணிந்து பாதப்பூப் போதணைவ தென்றுகொல்லோ" என்றுள்ளங் குளிர்ந்தோதுகின்றமையானும் தேவருள்ளும் நான்கு ஜாதியுண்டெனப் பெறப்



பட்டுச் சிவபெருமான் பிராமணராகின்றமையால் அச்சிவபெருமானொருவரையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்ற எழுவகைப்பட்ட சைவர்களும் மற்ற தேவதைகளைத் தொழும்படியான சாமானிய பிராமணர் முதலியோர்களைப் பார்க்கினும் எத்தனையோ மடங்குயர்ந்தவர்களாகின்றனர் என்பதும் நன்கு சித்தித்தது. பின்னால் விஸ்தரிப்போம்.

இனித் தொல்காப்பியத்தும், "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும் ஐவகைமரபின் அரசர் பக்கமும் இருமூன்று மரபினேனோர் பக்கமும்" என்று பொருளதிகாரம் புறத்திணையியல் (20)ஞ் சூத்திரத்தானும் நால்வகைச் சாதியுந் தொழிலும் விரித்தோதப்பட்டிருத்தல் காண்க. இனி நாயனாரும், "மறப்பினு மோத்துக்கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்", "அந்தணர் நூற்குமறத்திற்கு மாதியாய் நின்றது மன்னவன்கோல்" "ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர் காவலன் காவானெனின்", என்று கூறுதலுங் காண்க.

## சண்டேசுர நாயனார் ஆனிரை போற்றினமை.

பசுக்களின் மகிமையனைத்தும் நன்குணர்ந்த மகாசிவஞானியாகிய சண்டேசுர நாயனார் பசுக்களை மேய்த்த சரித்திரம் வருமாறு:— அறுமுகக்கடவுள் ஆறியிற் சூரபத்மனை மாய்க்கும்பொருட்டு மாகேந்திரக் கடல் என்னும் இந்து மகாசமுத்திரத்திலிருந்த மாகேந்திரபுரிக்குச் சென்றவமயத்து இடையிற் றங்கி ஓர் சிவலிங்க பிரதிஷ்டை செய்து பூசித்த காரணத்தானே திருச்சேய்ஞலூர் எனத் திருநாமம் வாய்ந்த திவ்ய க்ஷேத்திரத்தின்கண் பிராமணகுலத்திற் காசிபகோத்திரத்தில் எச்சதத்தன் என்பாருக்கும் பவித்திரை யென்னும் பதிவிரதா சிரோன்மணிக்கும் ஓர் சற்புத்திர ரவதரித்தனர். அவரது பிள்ளைத் திருநாமம் விசாரசருமனார் என்ப. அவர் ஐந்தாம் வயதிற் சிக்ஷை முதலான வேதாங்கங்களாறும், இருக்கு முதலிய வேதங்களுக்கும் சிவபிரானருளிச்செய்த காமிக முதலிய திவ்வியாகமங்களும், பூர்வ சன்ம விசேடத்தால் ஓதாதுணர்ந்தார். ஏழாண்டடைந்தபோது உபநயனஞ் செய்யப்பெற்று உலகியலை யோம்பற் பொருட்டு வேதியர்பால் வேதாத்தியயனஞ் செய்வாராயினர். அம்மறையவர்கள் வேதங்களையும் மற்றுமுள்ள கலைஞானங்களையும் ஓதுவித்தற்கு முன்னரே அப்பொருளைத் தாமே யறிந்துகொண்டு குசாக்கிர புத்தியோடு விளங்கும் அப்புதல்வனார்மாட்டு அந்தணர்கள் இறும்பூதெய்தினர். "ஒருமைக் கட்டான் கற்றகல்வி யொருவற் கெழுமையு மேமாப்புடைத்து" என்ற நாயனார் கூற்றுப் பொய்க்குமோ? "பலகலை யாகமவேதம் யாவையினுங் கருத்துப்பதிபசு பாசந்தெரித்தல்பதிபரமேயதுதா, னிலவுமருவுருவின்றிக் குணங்குறிகளின்றி நின்மலமா யேகமாய் நித்தமாகி, யலகிலுயிர்க்

குணர்வாகி யசலமாகி யகண்டிதமா யாநந்த வுருவாயன்றிச், செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த் திகழ்வது தற்சிவமென்பர் தெளிந் தோரே", என்று ஸ்ரீ உமாபதிசிவாசாரியசுவாமிகள் சிவப்பிரகாசத்திற் றெரித்தாங்கு, எழுவயதுடைய அப்பாலகனார், சர்வ வேதாகமேதிகாச புராண ஸ்மிருதியாதிகள் கூறும் பொருள் பதி (சிவம்), பசு (ஆன்மா) பாசம் (மலம்), என்னுந் திரிபதார்த்த நிச்சயமே யென்றும் அவற்றுட் செம்பொருட்டுணிவாயுள்ளது சிவமேயென்றும் அவ்விஷயத்தினை நன்கு போதிக்குஞ் சித்தாந்த சைவமே சிறப்புடைத்தென்றும் நன்குணர்ந்து, சிதாகாசத்திற்றாக்கியாடுங் குஞ்சிதபாதத்தையுடைய நடராஜ வள்ளல் நம்மை யடிமையாகவுடையாரென்னுங் கருத்தால் அக்குஞ்சிதபாதத்தையே "மலர் மிசையேகினான்மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்" என்றபடி தமது திருவுள்ளத் தாமரையின்மே லிருத்தி இடைவிடாது தியானஞ் செய்வாராயினர். "கற்றதனாலய பயனென் கொல் வாலறிவ னற்றா டொழா அர் எனின்" "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான் றாளை வணங்காத் தலை" என நாயனாரெடுத்துக்காட்டிய சிவாகமக் கருத்தும் கண்டுக் கருதற்பாற்று.

அச்சிறிய பெருந்தகையார் ஓர்நாள் வேதமோதும் பார்ப்பனச் சிறுவர் குழாத்துடன் போகுங்காலத்துப் பசுக் கூட்டங்கள் ஆண்டடைய, ஓர் ஈன்றணிமைத்தான பசுவானது இடையனை முட்ட, அவ்வாயன் அப்பசுவை யடிக்க அவ்விசார சருமர் இடையனைக் கோபித்து அவனை விலக்கி அவனுக்குச் சற்புத்தி புகட்டுவாராயினார்:— "இப்பெரிய உலகத் துதித்த எல்லா பிராணிகட்கும் மேம்பட்டதாயும், கங்கை முதலிய தீர்த் தங்கள், தேவர்கள், முனிவர்கள், சிவபிரான், முருகக்கடவுள் முதலியோர் தனது அங்கத்தில் வீற்றிருக்கப் பெற்றதாயும், சிவபிரானுக்கபிஷேகிக்கும் பொருட்டுப் பால் முதலிய பஞ்ச கௌவியங்களையுங் கோரோசனையையுங் கொடுப்பதாயும், அச்சிவபிரானும், விஷ்ணு முதலிய ஏனைய தேவர்களுந் தரிக்கும்படியான விபூதியுண்டாவதற்குக் காரணமாய கோமயத்தைக் கொடுப்பதாயு முள்ளதன்றோ பசு! மேலுஞ்சிவலோகத்தில் வீற்றிருக்கும் இடபதேவருடைய பத்தினிகளாகிய பஞ்ச பசுக்களின் வம்சத்திற் றோன்றியதன்றோ இப்பசுக்கள்? ஆதலால் அப்பசுவை அடித்த நீ அப்பசுக்களை மேய்க்கும் வேலையினின்றும் நீங்கக்கடவாய் யானே இனி அப்பசுக்களை மேய்ப்பேன்" என்றெடுத்துக் கூறினர். அவ்விடையனும் சிவதேஜசோடு ஜொலிக்கும் அப்பிராமணச் சிறுவருக் கஞ்சி அவரைத் தொழுதகன்றான்.

பின்னர் அவ்விசார சருமனார் அப்பசுக்களின் சொந்தக்காரர்களாகிய வேதியர்களது சம்மதம் பெற்று அப்பசுக்களைத்தாமே மேய்ப்பவராயினார். அவர் பிரம்மசாரியாதலின் அக்கால உத்தம வழக்குப்படி பலாசக்கோலைக்



கையிற்றாங்கிக் குழைவான குடுமியலையப் பூணூலில் சரங்குலம் அரிந்திடப் பட்ட கருமான்றோலும் பூணூலும் அழகிய சிறிய மார்பிடத்தசையத் திருவரையிலுடுத்த கோவணமும் விளங்க, மண்ணியாற்றின் கரையிற் பசும் புற்றரையில் மேய்த்து மாலைக்காலத்துச் சமித்துக்களையும் தீயுண்டாக்கற் குரிய அரணிக் கோல்களையு மெடுத்துக்கொண்டு அப்பசுக் கூட்டத்தினைச் சொந்தக்காரர்கள் இல்லத்திற்குப் போக்குவாராயினர்.

இவர் இவ்வாறு வெகு அன்பினோடு மேய்ப்பதால் பசுக்கள் மடி பெருத்து முன்னையவிட அதிகமாகப் பாலைச் சொரியப் பிராமணர்கள் யாகம் முதலியவற்றை நன்கு நடத்துவாராயினர் அவ்விசார சருமர் மீதும் வெகு சந்தோஷமுற்றனர். பிறகு அவ்விசார சருமரது பெரிய உபசாரங்களினால் அப்பசுக்கூட்டங்கள் அளவு கடந்த மகிழ்ச்சியுற்றுக் கன்றுகள் நீங்கி வீட்டிலிருந்த காலத்தும் விசாரசருமர் சமீபத்திற் சென்று அவரையே கன்றாக எண்ணி உங்காரஞ்செய்து ஒருவருங் கறவாம லிருக்கத் தாமே பாலைப் பொழிவனவாயின. அதைக்கண்ட விசாரசருமர் பசும்பால் கீழே வீணே போகாவண்ணம் குடங்களில் நிறைத்து பதி தர்மஞ் செய்வாராய்ப் பூர்வஜென்ம வாசனையால் மண்ணியாற்றின் மணற் குன்றில் ஆற்றிடைக்குறையிலுள்ள ஆத்திமரத்தின்கீழ் மணலாற் சிவ லிங்கமமைத்து ஆலயத்தையும் கோபுரத்தையும் பரிவாரதேவர்களின் ஆலயங்களையும் மணலினாலேயே வகுத்துப் பலவித புஷ்பங்களையும் பறித் துக்கொண்டுவந்து சிவாகம விதிப்படி அடிக்கடி பாலால் அபிஷேகித்துப் புஷ்பத்தைக்கொண்டருச்சிப்பாராயினர். இவரது உள்ளன்பைக் கண்ட சிவபிரானுஞ் சர்வவியாபகராதலின் அவ்விலிங்கத்தில் அதிஷ்டித்து எழுந்தருளியிருந்து அவர் பூசையை யேற்றுக்கொள்வாராயினர். "தாபர சங்கமங்கள் என்றிரண்டுருவினின்று மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைப்பன் நீபரன்றன்னை நெஞ்சினினை வையேனிறைந்த பூசை யாய்ப்பரம்பொருளை நாளுமர்ச்சிநீயன்புசெய்தே", என்றசிவஞான சித்திச் செய்யுளும் கண்டு ஞாபகத்தில் வைக்கற்பாலது.

இவ்வாறாக விசாரசருமனார் 'ஒரு நெறிய மனம்' வைத்தோராய் உள்ளமுருகித் திருமஞ்சன முதலான பொருள்களிற் சம்பாதிக்காத பொருள்களை அன்பால் மானசிகமாகப் பாவித்துக் குறைவை நிறைவாக்கிப் பூசையைப் பூரணமாய் முடித்துச் சிவானந்தத்திற் றிளைப்பாராயினார். பசுக்களோ சிவபூசைக்கு வேண்டிய பாலையுங் கொடுத்து வீடுகளிலும் வேண்டிய பாலையுங் குறையாமற் சொரிந்தன. விசாரசருமருந் தினேதினே இடைவிடாது நியமமாக இவ்வாறு அபிஷேகித்துச் சிவ பூசை செய்தலையே தமக்குச் சிறந்த திருவிளையாட்டாகக் கொண்டொழுகு

வாராயினர். அவர்செய்கையைக்கண்டஅயலானொருவன் அவ்வூர்மறையவர்களிடத்துச்சென்று முறையிட்டனன். அவர்களும் அவ்விசாரசருமருடைய பிதாவையழைத்து, "உமது குமாரன் செய்யுஞ்செய்கையைக் கேட்டீரோ? அக்கினிகோத்திரத்திற்குக் கறக்கின்ற ஓமதேனுக்களை (யாக பசுக்களை) யெல்லாம் அன்போடு மேய்க்கிறேனென்று கூறிக் கூட்டிப்போய் மண்ணியாற்றின்மணலிலே பாலையெல்லா மூற்றித்தன்மனம் போனபடியெல்லாஞ் செய்கின்றானும். அதைக் கண்ணுற்றானொருவன் வந்து கூறயாங்கேட்டேம்" எனக் குற்றஞ்சாட்டினர்.

அதைக்கேட்ட பிதாவாகிய எச்சதத்தன் (யஞ்ஞதத்தன்) அவர்களைச் சமாதானஞ் செய்து மறுநாள் மண்ணியாற்றங்கரை யணுகி ஆண்டுள்ளதோர் குராமரத்திலேறி ஒளித்துக்கொண்டு கவனிப்பானாயினன். விசாரசருமரோ வழக்கம்போற் சிவலிங்கமமைத்து திருமுடிமேல் மலரிட்டுப் பாலைக் குடங்குடமா யெடுத்தபிஷேகஞ் செய்வாராயினர். அதைக் கண்ணுற்ற பிதா கோபித்து மரத்தினின்றுமிழிந்து ஓடோடியும் வந்து கோலால் திருக்குமாரரின் முதுகிற்றாக்கி வைதனன். சர்வ பாவங்களையும் போக்கவல்ல சிவலிங்கபூஜா துரந்தரரானவிசாரசருமனார்சிவபூசையிலேயே மனோவாக்குக் காயங்களாகிய திரிகரணங்களையுஞ்செலுத்தி வேறொன்றுங் காணாதிருந்தமையால் தந்தையடித்ததையும் வைததையும்உணர்ந்தாரில்லை. (இதுதான் திரிகரணசுத்தியோடுகூடியபூசையெனப்படும். இத்தகையபூசை எம்போன்ற சாமானியர் செய்தலரிது.) நிற்க, தந்தைமட்டும் மீட்டும் பன்முறை மைந்தனைப் புடைத்தும் அதை அவருணரவில்லை. அவர் தேகப்பற்று விட்டமகானாதலின், 'மெய்வருத்தம் பாரார்...கருமமே கண்ணாயினார்" என்றுபிற்காலத்துகுமாரகுருபரர் கூறியாங்கு, சிந்தையும் மொழியுஞ் செல்லாநிலைமைத்தாகியசிவத்தினிடத்திலேயேசிந்தையைநிறுத்துஞ் சமர்த்தராய்ச் சிவபூசை யொன்றிலேயே நாட்டமுற்றிருந்தனர். அதைக்கண்ட கொடியோனாகிய எச்சதத்தன் மிகவுஞ்சினந்து பாற்குடத்தைக் காலாலெற்றிக் கவிழ்த்தனன். அபிஷேகிக்குங்குடம் தடைப்பட்டுருண்டதைக் கண்ணுற்ற கண்ணுதலடியார் அத்துஷ்ட காரியஞ் செய்தவன் தன் தந்தையென்றே தெரிந்து, சிவனடியார் சிவாபராதம் பொறாதலினாலும், சர்வலோகங்கட்கும் பரமபிதா 'ஆதிபகவனாகிய' சிவபிரானாதலினாலும் உடனே எச்சதத்தனது காலைத் துணிக்குங் கருத்தால் தமது திருமுன்னிருந்த ஓர் கோலை எடுத்தலும் அது அவ்வடியா ரெண்ணப்படி 'முதல்வனேமுன்னின்றால் முடியாததொன்றுளதோ' என்றவாறு சிவபிரான்றிருவருளால் மழுவாக மாறலும் அவ்வாயுதத்தால் எச்சதத்தனது காலை வெட்டலும் அவனுங் கீழ்வீழ்ந்திறந்தனன். (தொடரும்)

# வைணவக் காந்தி.

(உத்தரமேரூர், சைவத்திருவாளர், ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை அவர்கள்)

ஒவ்வொரு சமயத்துக்கும் பல கொள்கைகள் உள. அவற்றுட் சிறந்தது கடவுட்கு அவ்வச்சமயம் வழிவழியாக வழங்கிவரும் பெயரைப் பெரிதும் போற்றுதலாம். சைவம் சிவத்தையும் வைணவம் விட்டுணுவையும் கிறித்தவம் ஏசோவாவையும் மகமதியம் அல்லாவையுமே பெரிதும் போற்றி வருவது காண்க. ஆனால் எல்லாச் சமயங்களையும் நிகரெனவே ஏற்கவேண்டுமென்பதும் ஒரு கொள்கை. அது தெய்வத்தைப் பற்றிப் பேசும்போதெல்லாம்பெருவாரியாகக்கடவுள் ஆண்டவன் தேவன் கருத்தன் முதலியபொதுப்பெயர்களையேவழங்கவேண்டும்.பெருமதிப்பும்அவற்றிற்கே அது வைக்கும். அங்ஙனமின்றிஒரு சமயக்கடவுட்கேபெரிதும் வழங்கப்பட்டு வருஞ் சிறப்புப் பெயர்களை எல்லாச் சமயக்கடவுளருக்குஞ் சார்த்தப்படுமாறு பொதுப் பெயர்களாக்கப் பார்ப்பது அக்கொள்கைக்குத் தகாமையையும் பெயர்களின்பொதுவியல்பு சிறப்பியல்புகளை அறியவல்லமொழியாராய்ச்சியறிவு இல்லாமையையுமே காட்டும். இன்னும் ஒரு தனிப்பட்ட சமயத்திலுள்ள பற்றுத் தன்னை மறைமுகமாக வைத்துக்கொண்டு வெளிப்படையில் எல்லாச்சமயங்களிலும் உள்ளதாக நடித்துத் தன்மறைமுகச் சமயக் கடவுட்குரிய சிறப்புப் பெயர்களைப் பொதுப் பெயர்களாகக் காட்டியாவது தன் சமயத்தைப் பலருமறியச் செய்யவேண்டுமென்று முனைப்பதைவிட உலகிற் பெருங்கரவு வேறெதுவுமில்லை.

நிற்கக், காந்தி பிறந்த சமயம் வைணவம். அதனால் அச்சமயத்தில் அவருக்குப் பற்றுண்டு. அது மறைமுகம். வெளிப்படையில் எல்லாச் சமயங்களையும் ஒக்கப் பார்க்கும் பெருந்தகைமை தமக்குண் டென்பாரவர். அவர் கடவுளைப் பற்றிப்பேசியன பல. அவற்றுள் முக்கியமாவன மூன்று. அவர் பரதகண்டத்துச் சுயராச்சியத்துக்கு வைக்கவும், அக்கண்டத்து ஏழைகளுக்கு இடவும், தாழ்த்தப்பட்டவருக்குச் சூட்டவும் விரும்பும் பெயர்களே அவை. அப்பெயர்கள் ராமராஜ்யம், தரித்திர நாராயணன், ஹரிஜனம் என்பன. ராம நாராயண ஹரிநாமங்கள் வைணவசமயம் தன் கடவுட்குச்சிறப்பாக வைத்தாள்பவை. அம்மூன்று சந்தர்ப்பங்களுள் ஒன்றிலாவது அவருக்கு அல்லா ஏகோவா சிவாதி வேறு சமயத் தெய்வங்கட்குரிய சிறப்புப் பெயர்களுளொன்றை அமைக்க மனமொப்பவில்லை. வேண்டுமென்றே அவர் அவற்றை விட்டிருக்கிறார். அச்சந்தர்ப்பமும்மையால் அது வெளி. தத்தஞ் சமயத்தெய்வ நாமங்களே சிரேட்டமாகுமென அவற்றைப் போற்றியொழுகும் பல சமயிகளும் தாம் வாழும் பாதகண்டத்துக்கு வரப்போகுஞ் சுயராச்சியத்தை ராமராஜ்யமென்று பாவிக்கவேண்டும்? தங்களை நாராயணர்களென்று அழைக்க வேண்டும்? வெவ்வேறு சமயத்தெய்வங்கட்குமுரியராகிப் பலவகைப்பட்ட தாழ்த்சப்பட்டோர் தங்களை ஹரியினுடைய ஜனங்களென்று வழங்க வேண்டும்? என்ன அக்கிரமம்! இன்னொன்று. பல சமயங்களுக்கும் பொதுப் பிரமாணமாயிருக்கிற வேதத்துக்குக் காட்டிலும் வைணவத்

துக்கே பெரும்பாலும் பிரமாணமாயிருக்கிற பகவற்கீதைக்கே மூதன்மை கொடுத்து அக்காந்தி பேசிவருகிறார். கீதை சைவபரமான நூல்தான். ஆனாற் பல தூர்வியாக்கியானங்களை யநுசரித்து வழங்கும் வழங்கற்பாடு நோக்கி அது வேற்றுமதநூலாகக் காட்டப்பட்டது. அக்காந்தி தம்மை வைணவரென வெளிப்படையாகக் காட்டி அம்மதத்தை உலகிற் பரப்ப முயலலாம். அப்படியானால் அது செல்லாதென்பது அவருக்குத்தெரியும். ஆகையால் அவரதற்குத் துணியவில்லை. மேலும் அவருக்கு வந்துகொண்டிருக்கும் ஒருவகைப் பெருமையும் அதனால் அவரைவிட்டு நீங்கும். ஆகவே அவர் எல்லாச் சமயங்களையும் ஒக்கப் பார்த்தலென்ற ஒரு மேலங்கியைப் போர்த்துக்கொண்டு இக்கண்டத்திலுள்ள பல சமயவாதிகளையும் ஏமாற்றி வருகிறார். 'வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம், புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று' என்ற பொய்யாமொழியை அவர் விஷயத்தில் எல்லாச் சமயிகளும் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். ஓ வைதிக சைவர்காள்! அக்காந்தியின் வஞ்சவிளையால் உங்களுக்கே அளவிலடங்காத நஷ்டம் உண்டாகிறது. அதை யுணர்ந்து வைதிக சைவத்தைக் காக்க வேண்டாமா? அப்பொருட்டு 'இதோ நான் வந்தேன்' என்று மார்தட்டி இடபக்கொடியை உயர்த்துப் பிடித்து முன்வரவல்ல ஆண்பிள்ளை உங்களுள் இன்னுந் தோன்றவில்லையா?

## காந்தியும் 'தக்கா'ரும்.

ஹிராலாலென்பவர் காந்தியின் மூத்தபுதல்வர். அவர் சிலநாள் அப்துல்லாவானார். ஆனால் இப்போது அவர் பழைய ஹிராலாலே. பஞ்சமா பாதகங்களில் ஒன்று கட்குடி. அந்தப்பழக்கம் அவருக்குச் சுமார் இருபது வருஷங்களாக இருந்துவருகிறது. பல சமயங்களில் அவர் அம்மயக்கத்தால் வாயில் வந்தன பிதற்றுவதும் தள்ளாடி விழுவதுமுண்டு. ஒரு சமயம் சென்னை வீதிகளில் அவர் அப்படித் திரிந்தார். சர்க்கார் அவரை நியூஸன்ஸ் சார்ஜ் செய்து அவரிடமிருந்து ஒரு ரூபா அபராதமும் வசூலித்தனர். அந்த ஹிராலால் 'ஈன்றாளு முறியும் வெறுப்பு மிகவிளைக்கும்' என்ற அடிக்கு இலக்கியமுமாவர். அத்தகைய பாவச்செயலினின்றும் அவரைக் காபபாற்றக் காந்திக்கு வல்லமை யில்லாமற் போய்விட்டது. அக்காந்தி உலகைத் திருத்த எப்படி வல்லராவர்? அவருக்கு மஹாத்மாப் பட்டம் எப்படிப் பொருந்தும்? ஆனால் 'தக்கார் தகவில ரென்ப தவரவ ரெச்சத்தாற் காணப் படும்' என்றருளிய பொய்யாமொழியாரின் திவ்விய கண்போன்ற கண்பெற்ற சதுரர்க்கு அக்காந்தி யிப்படிப்பட்டவரென்பது தெரியாமலாபோம்?

## குச்சுக்காரி வீடுகளிற் காந்தி.

சில ஆண்டுகளுக்குமுன் காந்தி தமிழ்நாட்டிற்கு வந்து பல ஊர்களிலுஞ் சுற்றிக் கோயில்களை யெல்லாங் குச்சுக்காரி வீடுகளென்று பிரசங்கித்தார். இப்போது அவர் மலையாள நாட்டிற்குப் போய் அங்குள்ள குச்சுக்காரிவீடுகள் பலவற்றில் நுழைந்து நுழைந்து இன்ப நுகர்ந்து பரம திருப்தியடைந்துபோய்விட்டார். இந்தக்கதிதமக்குவருமென்று அவர்முன்னரே அறிந்திருந்தால் தமிழ்நாட்டில் அப்போது அப்படிப் பிதற்றியிருக்க



மாட்டார். அவர் தலையெழுத்து அது. அதனை வெல்ல யாராலாகும்? இப்போது அவருக்குக் குச்சுக்காரி வீடுகளெல்லாங் கோயில்களாகிவிட்டன; மக்களைக் கடவுள்பா லடைவிக்குஞ் சாதனங்களாகிவிட்டன. கோயில்களைக் குச்சுக்காரி வீடுகளென்று பிரசங்கித்த காலத்தில் அவர் அக்கூற்றை நிலையிட என்ன காரணங்கள் காட்டினாரோ? யாம் தேடியவரை அவற்றுள் எமக்கொன்றும் அகப்படவில்லை. ஆயினுஞ் சில விருக்கலாம். அவை இச்சுருங்கிய காலத்திற்குள் கோயில்களை விட்டு மறைந்தனவா? ஆமென்று அவர் குலதெய்வமும் விடைதரத் துணியாது. எல்லாக் கோயில்களும் அப்போதிருந்தபடியே யிப்போது மிருக்கின்றன. ஆனால் மலையாள நாட்டுப்பலகோயில்களிற் பஞ்சமரும் பிரவேசிக்க இப்போது இடந்தரப்படுகின்றனர். அந்த அனுமதிபற்றி இவரும் அவற்றுள் நுழைய வந்தார். இந்த அசம்பாவிதங்கள் அப்போதில்லை. இந்தவொரு காரணத்தாற் கோயில்களுக்குக் குச்சுக்காரி வீடுகளென்ற நிந்தை போய்க் கடவுள் மனிதருக்கு அருள வந்து தங்கிய நிலயங்களென்ற கவுரவம் வந்துவிடுமா? அப்படியானால் அவரும் அவரபிமான சமூகங்களும் உண்மையான குச்சுக்காரி வீடுகளில் நுழைந்தாலும் அவற்றையுங் கோயில்களென்று கவுரவித்திடலாமே. என்ன மோசம்! மேலும் அவர் அந்நிலயங்களிற் போய்ச் செய்ததென்ன? அங்குள்ள விக்கிரகங்களுக்குத் தீபவாராதனையாதி நடந்தபோது அவர் கைகூப்பினரா? கன்னத்திற் போட்டுக்கொண்டாரா? தோப்புக்கரணம் போட்டாரா? சிரத்திற் குட்டிக்கொண்டாரா? சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பித்தனரா? பெருமாள் கோயில்களிற் பத்மநாபா சேஷசயனா க்ஷீராப்திவாஸா பூமிநீளா சமேதா சங்கு சக்கர கதாதராவென்று விசேட நாமங்களாற் பெருமாளை விளித்தாரா? சிவன் கோயில்களிற் காலகாலா கபாலமூர்த்தீ பார்வதீபதயே திரிலோசனா நீலகண்டா சந்திரசேகராவென்று விசேட நாமங்களாற் சிவபிரானை யழைத்தாரா? ஒன்றுமில்லை. மொழுமொழுவென்று போய் மொழுமொழுவென்று வந்துவிட்டார். அவர்கோயில்களிற் போய் செபம் பண்ணினாரென்றுதான் பத்திரிகைகள் பெரும்பாலுஞ் சொல்லும். பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கும் அர்ச்சைகளை வணங்கினாரென்ற பிரசுரம் மிக மிக அருமை. அவருக்கு எப்படியோ கொஞ்சங் கீர்த்தி வந்திருக்கிறது. அவர்செய்யும் பிழைகளோ பெரியன: பல. அவரை அப்பிழைகள் மூலம் குறைகூறுவதா? அக்கீர்த்திமூலம் அப்பிழைகளுக்கு வியாக்கியானங்கள்செய்து அங்கீகரிப்பதா? என்ற பிரசினை பெருஞ்சிக்கல். யாம் காந்திக்குப் பயப்படவில்லை. அவரபிமானிகளை நினைத்தால் எமக்குச் சிம்மசொப்பனமாயிருக்கிறது. ஆகையாற் 'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே' என்ற அடியைக் கொண்டாவது யாம் அவரை அங்கீகரிக்கின்றேம். ஓடுஞ் செம்பொனும்

ஒக்கவே நோக்குவதும் பெரியோர்க் கியல்பென்ப. காந்தியும் ஒருபெரியார் தானே. ஆகலின் அவருக்குங் கோயிலுங் குச்சுக்காரி வீடும் ஒன்றுதான். செக்குஞ் சிவலிங்கமும் ஒன்றுதான். எப்படியாவது யாம் அவரை மதித்துவிட்டபடியால் அவரபிமானிகள் சாந்தி யடைக.

## வந்தே பிதரம்.

நாம் பரதகண்டத்திற் பிறந்தோம். பரதகண்டம் நம்மைப்பெற்றது. ஆகையால் அது நமக்குத் தாய்நாடாம். தந்தையின்றித் தாய் பிள்ளை பெறுவதில்லை. தாயின்றித் தந்தை பிள்ளை பெறலாம். மாந்தாதா அப்படிப் பிறந்தவரே. குமரக்கடவுள் திருவவதாரமும் அப்படிப்பட்டதே. மேலும் பரதகண்டம் நம் தாயானால் தந்தையார்? தந்தையை யறியாமலும் வந்தியாமலும் தாயையே போற்றுவது எவன் செய்யுங்காரியம்? நற்குலத்தி லுதித்தவர் பெற்றாரென்ற உரிமையே பற்றி வந்திக்க முந்துவாராயின் தந்தையையே வந்திப்பர். தந்தை விதை. தாய் நிலமே யாவள் ஆகையாற் பரதகண்டத்தை நம் தந்தை நாடெனப் போற்றுவதே கௌரவமாகும். மொழியைத் தந்தை மொழியென்றே கொள்ளவேண்டும். பிறவற்றையும் அப்படியே. ஆகையாற் பரதகண்ட வபிமானச் செல்வர் தேச சேவையி லீடுபட்டு உத்கோஷிக்கும் போதெல்லாம் 'வந்தேமாதரம்' என்பதை யொழித்து விட்டு 'வந்தே பிதரம்' என்று பெருமுழக்கிட்டுப்பெருமையை யடைவாராக. வந்தேமாதரம்—பரதகண்டமாகிய என் தாயை வந்திக்கின்றேன். வந்தேபிதரம்-பரதகண்டமாகிய என் தந்தையை வந்திக்கின்றேன்.

மொத்தத்தில் இந்தவிதமான உத்கோஷங்களே அர்த்தமற்றவை. பரதகண்டம் இப்போது அடிமை நாடு. அது விடுதலை யடையவேண்டும். விடுவிக்கவல்லவன் யார்? அவனைக் கண்டறிந்து அவன்பாலன்றோ வந்தனத்தைச் செலுத்தவேண்டும்? இந்நாட்டு மகமதியரிலும் தேசசேவகரிருக்கின்றனர். அவர் பரதகண்ட விடுதலைக்குத் துணைபுரியவல்லான் அல்லாவே யெனத் துணிந்தனர். ஆகையால் தேச சேவைக் காலங்களிலும் அவரிடமிருந்து புறப்படுங் கோஷம் அல்லாஹு அக்பர் என்பது. அதுபோலன்றோ ஹிந்துக்கோஷமுமிருக்கவேண்டும்? ஆனால் அதன் வாயிலுள்ளது வந்தேமாதரக் கூச்சலே. பாரதமாதா சிறைவைக்கப்பட்டிருக்கிறாள். அவள் காலிலேயே விழுந்து விட்டால் அவள் சுதந்தர மடைந்திடுவாளா? மாட்டவே மாட்டாள். அவளை விடுவிக்கவல்ல கடவுள் காலிலன்றோ விழவேண்டும். ஆனால் ஹிந்துவுக்குக் கடவுளை யழைக்கப் பெயர் கிடையாது. அந்தத் தரித்திரமே அவ்வந்தேமாதரக் கூச்சலுக்கு அதனை ஆளாக்கிற்று. ஓ வைதிகசைவர்களே! உங்கள் சமயத்துக்குச் சிவநாமம் சொந்தமாயிற்றே. நீங்கள் தேசசேவை செய்யும்போதெல்லாம் நமப்பார்வதிபதயே யென்றும் ஹரஹர மஹாதேவவென்றும் ஏன் வானம் வெடிக்க முழங்கக் கூடாது? சகவாச தோஷத்தால் ஏன் கெட்டுப்போகிறீர்கள்? இருப்பதைப் பறிகொடுக்கும் இளிச்சவாயனுக்கு இல்லாதது எங்கிருந்து வந்துவிடும்? அன்றியும் நீங்கள் தேசியக் கொடியென வொன்றை வைத்துப் பறக்கவிட்டுவருவதோடு உங்கள் சமயக்கொடியாகிய இடபக்கொடியையும் பறக்கவிட்டு மகிழுங்கள். தேசியக்கொடி சுயராஜ்யமானால் இடபக்கொடி சிவராஜ்யக்கொடியாகும். நமப்பார்வதீபதயே. ஹரஹர மஹாதேவ. இடபக்கொடிக்கு ஜே!

உ

# தமிழ் நாட்டுப் பெண்மணிகள்.

(சென்னை, மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர், உயர்திரு, உ. வே. சாமிநாதைய ரவர்கள் மயிலாப்பூர் ஸ்ரீமாட்டிகள் சங்கத்தில் 28—1—1937ல் செய்தபிரசங்கம்)

மக்களில் ஆடவர் எங்ஙனம் நாட்டினதுபெருமைக்குக் காரணமாக இருக்கிறார்களோ அங்ஙனமே பெண்டிரும் காரணமாகின்றனர். அறிவு ஆடவர் மகளிர் ஆகிய இருவகையார்க்கும் பொதுவாகும். கடைச்சங்க காலத்தில் பலபெண்கள் நற்புலமை வாய்ந்தவர்களாக இருந்தனரென்று தெரிய வருகின்றது. ஏறக்குறைய 50 பெண்பாலார் இயற்றிய செய்யுட்கள் இப்பொழுது கிடைக்கின்றன.

காக்கை பாடினியார் சிறுகாக்கை பாடினியார் என்ற பெண் புலவர் இருவர் யாப்பிலக்கண நூல்கள் இயற்றியிருக்கின்றனர். அள்ளூர் நன்முல்லையார் என்பது ஒரு பெண் புலவர் பெயர். அவர் இயற்கையை வருணிப்பதில் சிறந்தவர். ஒக்கூர் மாசாத்தியாரென்றவர் ஒரு தேர்ப்பாகனை ஒரு சேனைபதி பாராட்டியதாக ஒரு செய்யுள் கூறியிருக்கிறார். ஒரு வீரப்பெண்ணைப் பற்றி இவர் பாடிய அழகிய செய்யுளொன்று புறநானூற்றில் இருக்கிறது.

காக்கைபாடினியார் நச்செள்ளையாரென்பது ஒருவர் பெயர். அப்பெண்மணியார் தம் அன்பர் வருவதற்கு நன்னிமித்தமாகக் காக்கை கரைந்ததைப் பாராட்டி ஒரு செய்யுள் பாடியதால் அப்பெயர் பெற்றார். இவர் ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் என்ற அரசனைப் பாடி ஆபரணத்துக்குப் பொன்னும் வேறு பல பரிசுகளையும் பெற்றனர்.

குறமகள் குறியெயினி குறமகள் இளவெயினி என்னும் இரண்டு குறப்பெண்டிரும் வெண்ணிக் குயத்தியார் என்னும் குயவர் குலத்துதித்தவரும் பாடிய செய்யுட்கள் உள்ளன. இவற்றால் அக்காலத்தில் எல்லாச்சாதி மகளிரும் நற்புலமை வாய்ந்தவர்களாக இருந்தனரென்று தெரிகின்றது. பொன்முடியாரென்ற ஒருவர் வீரனுடைய கடமையைச் சிறப்பித்து ஒரு செய்யுள் கூறியுள்ளார். அவர் முடிபுனைந்தவரென்று தெரிகின்றது. புலவர்கள் முடிபுனையும் வழக்கம் முரஞ்சியர் முடிநாகராயர் வில்லிப்புத்தூர், சேக்கிழார் முதலியோர் வரலாறுகளாலும் தெளியப்படுகிறது. சில பெண் புலவர்கள் இளமையிலேயே சிறந்த கவிஞர்களாக விளங்கினர்.

சங்ககாலத்துக்குப் பிறகு விளங்கிய பெண் புலவர்கள் பலர். ஔவையாரென்ற ஒருவர் ஆத்திசூடி முதலிய அரிய நீதி நூல்களைப் பாடியிருக்கின்றனர். ஆண்டாளுடைய பாசுரங்கள் திவ்யப் பிரபந்தத்தில் ஒரு பகுதியாக விளங்குகின்றன. காரைக்காலம்மை

யார் பாடல்கள் பதினோராம் திருமுறையில் சோமசுந்தரக் கடவுள் பாசுரத்துக்கு அடுத்தபடியாக இடம் பெற்றிருக்கின்றன.

வரகுணபாண்டியன் மனைவி, அம்மைச்சிஉத்தரநல்லூர் நங்கை தமிழறியும் பெருமாள், கம்பர் தாதி சொக்கம்பட்டி ஜமீன்தார் மனைவி முதலிய பல பெண்பாலார் நற்புலமை வாய்ந்தவர்கள். சிலர் வாதமிட்டு வென்றிருக்கிறார்கள். குண்டலகேசி அத்தகையவள். கம்பர் பெண்கள் கல்வியிற்சிறந்தவர்களென்பதைப் பல இடங்களில் சொல்லியிருக்கின்றார்.

பண்டைக்காலத்துப்பெண்மணிகளுக்குச் சங்கீதம், வைத்தியம், சோதிடம், சித்திரம், சிற்பம் முதலியவற்றிலும் பயிற்சி இருந்தது.

அவர்களுக்கு மனோபலமும் தேகபலமும் அதிகமாக இருந்தன. பொறுமை யென்பது அவர்களுடைய பூஷணம். தன்னுடைய குடும்பம் வறுமையுற்ற காலத்தில் செல்வமுள்ள தன் பிறந்தகத்துக்குப் போகாமல் ஒரு வேளைமட்டும் உணவுண்டு வாழ்ந்த ஒரு பெண்ணைப் பற்றி நற்றிணையிற் கூறப்பட்டுள்ளது. வீரம் நிறைந்த பெண்களுள் கண்ணகி சிறந்தவள்; வீரபத்தினி யென்று அவளைச் சொல்லுவர். வீரக்குடியிற் பிறந்த பெண்களைப் பற்றிப் புறநானூற்றில் அரிய வரலாறுகளைக் காணலாம்.

பெண்கள் உடல் வலிமை பெறுதற்கு அக்காலத்தில் பலவகை விளையாட்டுகள் இருந்தன. பந்தாடுதலென்பது பெண்களே கைக்கொண்டிருந்த விளையாட்டு. பெருங்கதையில் ஓர் அத்தியாயம் முழுதும் சில பெண்கள் தம்முள் பந்தயங்கூறிப் பந்தாடிய செய்தி மிக அழகாகவும் ஆச்சரியமாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. தெள்ளேணம், சாழல், தோணோக்கம், உந்தி கும்மி, கோலாட்டம் முதலிய விளையாட்டுக்கள் பெண்களுக்குரியன.

ஒரு வீட்டின் தலைவி பெண்ணென்பது நம்நாட்டினர் வைத்த அமைப்பு. அதனால்தான் இல்லென்றும் மனைவியென்றும் அவர்களுக்குப் பெயர்கள் உண்டாயின. இல்லாளுடைய சம்மதத்தைப் பெற்றே தலைவன் தர்மஞ்செய்யவேண்டும். விருந்தினரை உபசரிப்பதில் பெண்களே அதிகக் கருத்துடையவர்களாக இருந்தனர். கண்ணகி கோவலனைப் பிரிந்து வாழ்ந்த காலத்தில் உண்டான குறைகளாக வேறொன்றையும் கூறாமல் அறவோர் முதலியோரை உபசரியாததையே பெருங் குறையாகச் சொல்லுகிறாள். கணவனுக்கும் மனைவிக்கும் ஏதாவது மனஸ்தாபம் உள்ளகாலத்திலும் விருந்தினர் வந்தால் அந்த மனஸ்தாபம் நீங்கி உபசாரம் செய்தல் பெண்கள் வழக்கம்.

பெண்டிரைப் பிராயம், சாதி முதலிய வரையறையில்லாமல் தாய் என்றே கருதிவந்தனர். அம்மை, அம்மா, ஆச்சி என்று அமைந்திருக்கும் தமிழ்ப்பெயர்களே இந்தக் கொள்கைக்குச் சிறந்த



அடையாளமாகும். பெண்களைத் தெய்வமாகப் போற்றும் வழக்கம் தமிழ் நாட்டிற் பழங்கால முதல் இருந்துவருகிறது.

ஒரு பெண்மணி தன் வீட்டில் ஏவலாளாகவும், புருஷனுக்கு மந்திரியாகவும், குழந்தைக்கு உபாத்தியாயராகவும், குடும்பத்திற்கு வைத்தியராகவும் பொக்கிஷ மந்திரியாகவும் இருந்து வந்தாள். 'தற்கொண்டான் வளத்தக்கால் வாழ்க்கைத் துணை' என்பது குறள். வரவுக்கேற்ற செலவைத்தெரிந்து செய்தல் அவள் கடமை.

அறம், பொருள், இன்பமென்னும் மூன்று விஷயங்களிலும் பெண்களுடைய சம்பந்தத்தால் தமிழ் நாட்டுக்கு நன்மையுண்டாயின. அப்படியே மோக்ஷத்தை யடையும் முயற்சிகளிலும் அவர் சிறப்படைந்திருந்தனர். நாயன்மார் பலருடைய மனைவியர் அவர்களுடைய தொண்டுக்குத் துணையாகநின்று உதவி யிருக்கின்றனர். மங்கையர்க் கரசியார் தம் கணவனைத்திருத்திஞானசம்பந்தருடைய ஆற்றலை வெளிப்படுத்தினர். திலகவதியார் அப்பர் சைவசமயாசாரியாராவதற்குக் காரணமாகவிருந்தார்.

வைஷ்ணவர்களுள் ஆண்டாள் கொங்குப் பிராட்டியா ரென்ற பெண்களும் பௌத்தர்களுள் மணிமேகலை முதலியவர்களும் ஜைனர்களில் கவுந்தியடிகளாதி பேர்களும் மத விஷயமாகப் பல தொண்டுகளைச் செய்திருக்கிறார்கள்.

பெண்பாலாரைப் பற்றித் தமிழ் நூல்களிலுள்ள செய்திகளெல்லாவற்றையும் தொகுத்து வகைப்படுத்தினால் ஒவ்வொரு துறையிலும் அவர்கள் தம்முடைய ஆற்றலை வெளிப்படுத்தியதை அறியலாம். அவர்களுடைய பெருமை ஆடவர்களுடைய பெருமையோடு சேர்ந்தே காணப்படுகிறது. சங்கீதத்தில் சுருதி எப்படியோ அப்படியே வாழ்க்கையிற் பெண்களுடைய நிலை. சுருதியில்லாமல் சங்கீதம் நடைபெறாது. ஆனால் சங்கீதத்தில்வாத்தியங்களும் வாய்ப்பாட்டும் வெளிப்படையாகத்தோன்றி எல்லோராலும் போற்றப் படுகின்றன. சுருதியோ அவ்வளவு பெருமைக்கும் ஆதாரமாக நின்றும் புலப்படாமல் இருக்கிறது. பெண்களும் எல்லாவற்றையும் செய்து பிறர் புகழுக்கு அஸ்திவாரமாக இருந்துசுருதியைப்போலக் கலந்துநிற்கின்றனர்.

---

## பர்மா நாட்டுச்கோட்டைச் செட்டியார் சங்கத்தினர்

மிகவும் மேன்மை தங்கிய இந்தியராஜப்பிரதிநிதியும், கவர்னர் ஜெனராலுமான லின்லித்கோ பிரபு P. C. K. T., G. M. S. I., G. M. E., T. D., அவர்களுக்கு, 8—1—1937ல் வழங்கிய

## வரவேற்புப் பத்திரம்.

மேன்மை தங்கிய பிரபுவே!

பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கத்தின் அங்கத்தினர்களாகிய நாங்கள் மேன்மை தங்கிய தங்களுக்கும் மேன்

186959

மைதங்கிய லின்லித்கோ சிமோட்டிக்கும் கோபுரங்கள் நிறைந்த இந்நாட்டிற்கு விஜயஞ்செய்யுந் தற்போது, பரிபூரணமான அன்பு மிக்க வரவேற்பளிக்கின்றோம்.

மேன்மை தங்கிய தாங்கள் இந்நாட்டிற்கோ, இந்நாட்டின் மக்களுக்கோ பரிச்சியமில்லாத புதியவரன்று. தாங்கள், சென்ற 1926-ம் ஆண்டில் அரசாங்க விவசாய விசாரணை சபையின் தலைவராக இருந்து இந்நாட்டின் மக்களுடைய நிலைமைகளையும், விவசாய சம்பந்தமாக அவர்களுக்குள்ள தேவைகளையும் கண்டறியச் சந்தர்ப்பம் கிடைத்த முதற்கொண்டே இந்நாட்டிற்குந் தங்கட்குந் தொடர்பு உண்டாயிருக்கின்றது.

பர்மா நாடானது, தனது முன்னேற்றத்திற்கு மிகுதியும் விவசாயத்தையே நம்பியுள்ளது. இந்தியாவின் விவசாயத்தை சாஸ்திரீக முறைப்படி மேன்மைப்படுத்தத் தாங்கள் எடுத்துக் கொண்டுள்ள ஊக்கமும், அதில் தங்களுக்குள்ள உண்மை ஞானமும் யாவருமறிந்தவையேயாகும். இப்போது தாங்கள் மேற்கொண்டுள்ள மார்க்கங்களும், தாங்கள் போதித்துவரும் நலம் பொதிந்த திட்டங்களும், இனிமேலுஞ் செய்யப்போகும், அல்லது செய்யக்கூடிய மார்க்கங்களும் முறைகளும் இந்த நாட்டிலும் பரிபூரணமாகக் கையாளப்பட்டு, இந்தியாவிலிருப்பது போன்று இந்நாட்டிலும் முதுகெலும்புபோலவுள்ள விவசாயமக்கள் தொடர்ந்து நன்மையடைய ஏதுவுண்டாகுமென்று நம்புகிறோம்.

எங்கள் சங்கமானது 1923-ம் ஆண்டில்தான் நிறுவப்பெற்றதென்றாலும், எங்களினத்தவர்கள் இந்நாட்டோடு நீண்ட காலத் தொடர்பு கொண்டுள்ளார்கள். எங்களினத்தவர்கள் இந்நாட்டின் பொருளியலிலும், விவசாயத்துறையிலும் செய்துள்ள அபிவிருத்திகள் சிறுபான்மையானவையென்று சொல்லிவிடமுடியாது. எங்கள் செல்வத்தில் பெரும்பான்மையை நாங்கள் இந்த நாட்டில் போட்டிருக்கின்றோம். எங்கள் இனத்தவர்கள், வெகு காலமாகத் தங்கள் மாமூல் தொழில் முறையை இங்கு நடத்தி வந்துள்ளனர். அத்தொழில் இந்நாட்டின் பாங்கித் தொழிலின் முதுகெலும்பு போன்றதெனப் பெரிதும் பாராட்டப் பெற்று வந்திருக்கிறது.

தாங்களும் தங்களுக்கு முன் இருந்தவர்களும், பர்மாவிலுள்ள இந்தியர்களின் நன்மை நலங்களிலும் அவர்களின் முன்னேற்றத்திலும் வெகுவாகச் சிரத்தை காட்டியுள்ளீர்கள். பர்மா-இந்தியா பிரிவினைக்குப் பிறகும், அதேமாதிரி சிரத்தை எடுத்துக்கொள்ளும்படி மிகவும் மனப்பூர்வமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

முடிவுரையாக, மறுமுறையும், மேன்மை தங்கிய தாங்களிருவருக்கும் அன்பார்ந்த வரவேற்பளிப்பதோடு, தாங்கள் எங்கள் ஸ்வீகார நாடாகக் கொண்டிருக்கும் இவ்வழகிய நன்னாட்டில் தங்கள் சுற்றுப்பிரயாணம் இன்பமாக நிறைவேறவேண்டுமென்றும் கோருகிறோம்.

உ

# சென்னை மாகாண ஸநாதநதர்ம மகாநாடு.

என்றும் காணாத உத்ஸாகத்துடன் சென்னை மாகாண ஸநாதநதர்ம மகாநாடு ஜனவரி 6௳ சனிக்கிழமை ஆரம்பமாயிற்று. கோயம்புத்தூர், பாலக்காடு, மதுரை, தேவகோட்டை, காரைக்குடி, திருச்சினாப்பள்ளி, கும்பகோணம், சீகாழி, ஸ்ரீரங்கம், காஞ்சீபுரம் முதலிய மாகாணங்களின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தனர். வரவேற்புக் கமிட்டியினர் மிகவும் பலமான முறையில் மகாசபை நடக்க ஏற்பாடு செய்திருந்தனர். குஜராத்தி வல்லபசம்பிரதாயத்தைச்சார்ந்த பல பிரமுகர்களும், தென்னிந்தியபிரமுகர்களும் ஒற்றுமையுடன் மகாநாட்டை மிக அழகாக நடத்தினர். மகாசபையின் விளம்பரங்கள் சென்னையின் எல்லாப் பாகங்களிலும் காணப்பட்டன. சநாதனதர்மத்தை ரக்ஷிப்பதாக அபேக்ஷகர்களிடம் உறுதிமொழி வாங்கவேண்டுமென்று கூறும் விளம்பரக்காகிதங்கள் நகரமாளிகைகளின் ஒவ்வொரு சுவரிலும் ஒட்டப்பட்டிருந்தன. தவனோத்சவ பங்களாவில் மகாசபைக்காக மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட விஷேசபந்தல் அமைக்கப்பட்டிருந்தது. நூற்றுக்கணக்கான தொண்டர் மகாசபையில் ஊழியம் புரிந்தனர்.

சனிக்கிழமை மாலை 4-மணிக்கு அக்கிராசனாதிபதி ஊர்வலம் ஆரம்பிக்கப்பட்டது. ஊர்வலத்திலும், மகாசபையிலும் கலந்துகொள்வதற்காக நடுப்பகலிலிருந்தே நகரின் நாலாபாகங்களிலிருந்தும் ஏராளமாக மகாஜனங்கள் வந்தவண்ணமாகவிருந்தனர். ஊர்வலத்தில் நன்றாக அலங்கரிக்கப்பட்ட பகவானின் படம் காரில் வைக்கப்பட்டு முதலில்சென்றது. அடுத்தகாரில் புருஷோத்தமதாஸ், கோகுல்தாஸ், அக்கிராசனர் ராவ் சாஹிப் N. நடேசையர் ஆகியவர்கள் மாலையிட்டு அழைத்துவரப்பட்டனர். தலையில் சிவப்புத் தலைப்பாகையுடன் குஜராத்தி மாணவத்தொண்டர்கள் அக்கிராசனர் காருடன் சென்றது மிக்க மனோகரமாக இருந்தது. ஊர்வலத்தில் அடிக்கடி சநாதன தர்மத்திற்கு ஜே என்ற கோஷம் வானத்தைப் பிளந்தது. அபேக்ஷகரிடம் மதவிஷயமான உறுதிமொழி வாங்கக் கூறும் விளம்பர அட்டைகள் ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கில் காணப்பட்டன. வேதகோஷத்துடன் ஊர்வலம் பார்த்தசாரதி வீதிவழியாகச் சென்று மகாநாட்டுப் பந்தல்வாயில் முடிவுபெற்றது. பந்தல்வாயிலில் அக்கிராசனாதிபதி பூர்ண கும்பத்துடன் வரவேற்கப்பட்டார். வேதபாராயணத்துடன் சபை நடவடிக்கை ஆரம்பமாயிற்று. பிரதிநிதிகளும், விஸிட்டர்களும் ஆயிரக்கணக்காய்க்கூடியிருந்தனர். ஆரம்பத்தில் ஒருபெண் தெய்வணக்கம் செய்தாள். திருப்புகழ்மணி ஸ்ரீ. டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயர் அட்வோகேட் தேவாரத்திலிருந்து தெய்வ வணக்கம் செய்தார். திவான்பகதூர் கோவிந்ததாஸ், சதுர்புஜதாஸ் (வரவேற்புக்கமிட்டித்தலைவர்) விஜயம் செய்திருந்தும் அவர் படிக்கமுடியாமையால் ஸ்ரீ கிருஷ்ணதாஸ் அவர்கள் வரவேற்புப் பிரசங்கத்தைப்படித்தார். ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள், ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ அழகியசிங்கர்சுவாமிகள், ச்ருங்கேரி ஸ்ரீசங்கராசார்ய சுவாமிகள், கோவர்த்தனபீடாதிபதி ஆகியவர்களுடைய ஸ்ரீமுகங்கள் படிக்கப்பட்டன. ராஜாசபாபூஷண K. R. ஸ்ரீநி

வாஸய்யங்கார், தேசபூஷண பிரசந்ந வேங்கடேச்வரராயர், திவான்பக தூர், S. ஆராவமுதய்யங்கார், தேவதாஸ்தாக்கர், ஸ்ரீபுரோபஸர் தர்க்கால் முதலியவர்களிடமிருந்து மகாநாடு நன்கு நடைபெறவேண்டுமென்று வந்துள்ள செய்திகள் படிக்கப்பட்டன. T. S. ராமசுவாமி ஐயர் அவர்கள், மதுரை ராவ்சாஹிப் N. நடேசையர் அவர்களை அக்கிராசனத்திற்குப் பிரேரேபித்தார். C. நரசிம்மாச்சாரியார், டாக்டர் சங்கரநாராயண ஐயர் ஆகியவர்கள் ஆமோதித்தனர். பலத்த கரகோஷத்துடன் அக்கிராசனாதிபதி மாலையிடப்பட்டு மேடைமீது வரவேற்புக் கமிட்டித் தலைவருடன் அமர்ந்தார். அக்கிராசனர் சுமார் 2மணிவரை தமது பிரசங்கத்தை இங்கிலீஷில் செய்தார். மிகவும் ஆழ்ந்த கருத்துள்ள இப்பிரசங்கத்தை மஹாஜனங்கள் மிகப் பொறுமையுடன் கேட்டுவந்தனர்.

இத்துடன் இரவு 8-மணிக்கு மகாசபை கலைந்தது. இரவு 9மணிக்கு ஸ்ரீ டி. எஸ். ராமசுவாமி ஐயரின் ராயப்பேட்டை லலிதா விலாஸம் பங்களாவில் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. பல பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தினர். காங்கிரஸின் ராஜீயக்கொள்கையை ஒத்துக்கொள்வதில் உக்கிரமாக விவாதம் நடைபெற்றது. இரவு 2 மணிவரை கூட்டம் நடைபெற்றுத் தீர்மானங்கள் தயாரிக்கப்பட்டன.

ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கு மறுபடியும் மஹாசபை ஆரம்பமாயிற்று அதிகாலையிலிருந்தே பந்தலில் ஏராளமாக மகாஜனங்கள் கூடிவிட்டனர். மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களும் விஜயம் செய்திருந்தனர். சநாதன தர்மத்தைப் புகழ்ந்து வைதேஹிவிஜயராகவன்என்ற பெண்ணால் பாட்டுப் பாடப்பட்டது.

பிறகு தீர்மானங்கள் மீது விவாதம் ஆரம்பமாயிற்று.

முதல் தீர்மானம் பின்வருமாறு:—

திருவாங்கூர் அரசரின் அறிக்கை ஆமகசாஸ்திரங்களை அநுசரித்து ஏற்பட்டுள்ள தேவாலய வழக்கத்தின் வேரை அறுப்பதாக விருப்பதால் அவ்வறிக்கையை இம்மகாநாடு பலமாகக் கண்டிக்கிறது.

ஷை அறிக்கை சட்டவிரோதமானதென்றும், சாஸ்திரமுறைக்கு முரண்பட்டதென்றும் அரசியல் சட்டத்திற்குப் புறம்பானதென்றும் சாதாரண நியாயத்திற்கு ஒவ்வாததென்றும் இந்த மகாசபை அபிப்பிராயப்படுகிறது. ராஜ்யத்திற்கு உட்பட்டும் வெளிப்பட்டும் உள்ள சநாதநிகளின் பலத்த உணர்ச்சியை மதித்துஷை அறிக்கையைவாபீஸ்வாங்கக்கோருகிறது.

ஷை அறிக்கை ரத்தாகும் முறையில் சட்டமூலமாக நடவடிக்கை எடுக்க சட்ட அறிவாளர்களின் அபிப்பிராயத்தைக் கேட்கக் காரியக் கமிட்டிக்கு இக்கூட்டம் பூரண அதிகாரமளிக்கிறது.

இம்மகாநாடு தங்களுடைய ஆதிக்கத்திலுள்ளகோவில்களில்திருவாங்கூர்போல்விருத்தமான சீர்திருத்தம்செய்யாது சநாதனிகளின் மதஉரிமைகளைக் காப்பாற்றியதற்காக மைசூர் மகாராஜா, மைசூர் மகாராஜாவின் கவர்ன்மெண்ட், கொச்சிமகாராஜா, சேது லக்ஷ்மிபாய் (திருவாங்கூர்ஸீனியர் மகாராணி) கள்ளிக்கோட்டை ஜாமோரின் ஆகியவர்களுக்குத் தங்கள் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறது.



இத்தீர்மானத்தை கோயம்புத்தூர் அட்வோகேட் R. சங்கரநாராயண ஐயர் பிரேரித்தார். N. ஸ்ரீநிவாஸசாரியார் (மாஜி தேவஸ்தானக்கமிஷனர்) கடப்பை ஸ்ரீ லக்ஷ்மி அம்மா, அட்வோகேட் நரஸிம்மாசாரியார், V. R. கிருஷ்ணமாசாரியார்,காஞ்சி ராமச்சந்திரசர்மா, K. V. சர்மா, இவர்களால் ஆதரிக்கப்பட்டு நிறைவேறியது. T. S. கிருஷ்ணஸ்வாமிஐயங்கார் அட்வோகேட் அவர்கள் கொண்டுவந்த திருத்தம்மகாசபையில் ஆதரிப்பாரில்லாததால் கைவிடப்பட்டது. கீழ்க்கண்ட இரண்டாவது தீர்மானத்தை தேவகோட்டை அட்வோகேட் S. சுப்பிரமணிய ஐயர் பிரேரித்தார்.

"மத ஆசார சம்பிரதாயமான சட்டங்களைச் சட்டசபையில்கொண்டு வருவதில்லை என்றும், வேறு யாராவது இவ்வித தீர்மானங்கள் கொண்டு வந்தால் அவைகளையும் எதிர்ப்பதாகவும் உறுதிமொழியைக் காங்கிரஸ்காரர்கள் அளித்தால் மட்டும் இம்மாகாணத்தில் முழுவதுமுள்ள சநாதநிகள் ராஜீயக் கொள்கை சம்மர்தப்பட்ட மட்டில் காங்கிரஸை ஆதரிப்பதென்று உறுதிமொழி அளிக்கிறது".

மேலும் மதசம்பந்தமாகவும் மதாசாரசம்பந்தமாகவும் பூரணசுயேச்சை அளிக்கத்தவறிவிட்டதால் புதிய சீர்திருத்தச்சட்டத்தை இக்கூட்டம் ஏற்க மறுக்கிறது.

அட்வகேட் டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயர், மயிலை அட்வோகேட் Y. ஜயராமையர், திருச்சி ஸ்ரீமான் டவாய் ராமநாத சாஸ்திரியன் இவர்கள் ஆதரித்துப் பேசின தீர்மானத்தை ஓட்டுக்கு விடப்பட்ட பொழுது அக்ராசனாதிபதி காங்கிரஸ் மகாசபை பிரஸிடெண்ட் பண்டிட்ஜி இடமிருந்து மதாசார சம்பந்த விஷயங்களில் மெஜாரிட்டிப்படி நடப்போம் என்று எழுதப்பட்டு வந்திருந்த கடிதம் படிக்கப்பட்டது. தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று.

சநாதநதர்மத்தை பிரசாரம் செய்ய கிராம, நகர, தாலூகா, ஜில்லா சங்கங்கள் ஏற்படுத்தவேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறதென்ற தீர்மானத்தை தர்மபிரசார கமிட்டி மெம்பர், மாஜி இன்ஜினீர், கும்பகோணம் சாமிநாத சாஸ்திரிகள் பிரேரித்தார். அக்நிஹோத்ரம் ராமாநுஜ தாதாச்சாரியார், ராமராவ் கும்பகோணம் இவர்கள் ஆதரித்துப்பேசத் தீர்மானம் நிறைவேறிற்று.

"சீர்திருத்தக்காரர்களாலோமற்றவர்களாலோ மத மதாசாராதிகளால் எதிர்ப்பு ஏற்பட்டாலும், சட்டம்செய்யமுயற்சிசெய்யப்பட்டாலும் அதைத் தவிர்த்து நிற்க இந்த மகாசபை கூட்டியவர்கள் சென்னை மாகாண வர்ணாச்சிரம ஸ்வராஜ்ய சங்கம் என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்த இக்கூட்டம் அதிகார மளிக்கிறது. இதற்காக ஒரு லக்ஷம் ரூபா பண்டு வேண்டு

மென்றும் மடாதிபதி முதலியவர்கள் தானமாக இதற்கு உதவவேண்டுமென்றும் இம்மகாநாடு கேட்டுக்கோள்ளுகிறது. இந்த மாகாண சங்கத்திற்கு, மதுரை ராவ்சாஹிப் நடேசையர் தலைவர். திவான்பஹதூர் கோவிந்ததாஸ், சதுர்ப்புஜதாஸ், புருஷோத்தம தாஸ், கோகுல்தாஸ், மாஜி கமிஷனர் என். ஸ்ரீநிவாசாசாரியர் இவர்கள் உபதலைவர்கள். ஹரிதாஸ், கிரிதர்தாஸ் டிரஸ்டிகள். T. S. ராமசுவாமி ஐயர், S. லக்ஷ்மீநரசிம்மாசாரியார், இவர்கள் காரியதரிகள். பல ஜில்லாக்களைச் சேர்ந்த செல்வாக்குள்ள தோர்காரியக்கமிட்டியையும் இக்கூட்டம் நியமிக்கிறது." இத்தீர்மானத்தை சாஸ்திரரத்ன தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரி பிரேரித்துப் பேசியபின் மகோபதேசக சோமதேவ சர்மா, K. நடேச சாஸ்திரிகள், ரங்கநாதையர் ஆகியவர்கள் ஆதரித்துப்பேசினார்கள். தீர்மானம்நிறைவேறியது. இச்சமயம் வேண்டுகோளுக்கிணங்கிப்பலரும் தாராளமாகப் பொருளுதவி செய்தனர். ஆயிரக்கணக்கில் ரூபா ஸ்தலத்திலேயே சேர்ந்துவிட்டது.

இந்தசபை சாரதாசட்டத் திருத்தமாக B. தாஸ் அவர்கள் அசம்பிளியில் கொண்டுவந்துள்ள மசோதா M. C. ராஜா கொண்டுவந்துள்ள தீண்டாமை விலக்கு மசோதா இவைகளைப் பலமாகக் கண்டிப்பதுடன் ஷை மசோதா பெரும்பான்மையோரின் உணர்ச்சிக்கு எதிராக விருப்பதால் அதை ஆதரித்து ஓட்டுக்கொடுக்கக் கூடாதென்று கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ளுகிறது.

ஆர்யதர்மம், தர்மராஜ்யா, மார்க்கபந்து, சநாதநிஸ்ட், மாத்வமித்ரன், கலைமகள், பிரசந்நலக்ஷ்மி முதலிய சநாதன வாரப்பத்திரிகைகளை ஆதரிக்கவேண்டுமென்று சநாதநிகளை இக்கூட்டம்கேட்டுக்கொள்ளுகிறது.

கலப்புவிவாஹசம்பந்தமாகபகவான்தாஸ் கொண்டுவந்ததீர்மானத்தைத் தோற்கடித்ததற்காக சநாதநி சட்டசபை மெம்பர்களையும், முஸ்லீம் அங்கத்தினரையும் இந்தியா கவர்ன்மெண்டாரையும் இக்கூட்டம்பாராட்டுகிறது.

இந்த சபை அரசாங்கத்தாரையும் பிரைவேட் ஸ்கூல் அதிகாரிகளையும், மதபோதனையை மாணவர்களுக்குச் செய்வதற்கான ஏற்பாட்டைச்செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன் தாய்தகப்பன்மார்கள் இதை வீட்டிலும் பள்ளிக்கூடங்களிலும் கவனித்து வரவேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

இத்தீர்மானத்தை ஆதரித்து மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையர், அக்நிஹோத்ரம் தாததேசிக தாதாசார் ஆகியவர்கள் பேசினார்கள்.

சநாதநிகளுக்கு உறுதிமொழி யளித்துள்ள G. பத்மநாப நாயுடு, S. ராஜகோபாலன் (அட்வோகேட்) P. S. முத்துசெட்டியார், S. கிருஷ்ணராவ் இவர்களின் அபேக்ஷையை இக்கூட்டம் ஆதரிக்கிறது. சநாதநிகளைப் பூரணமாக ஆதரிக்கக் கேட்டுக்கொள்ளுகிறது.

இத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டவுடன் தலைவர்முடிவுரையுடன் வந்தனோபசாரங்கள் கூறப்பட்டு சநாதநதர்மத்திற்கு ஜே என்ற கோஷத்துடன் சபை இனிது நிறைவேறியது. (ஆரியதருமம்)

உ

# மெய்கண்டார்.

(இது திருப்பாதிரிப்புலியூர் உயர்திரு, சிவசண்முகமெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் சொற்பொழிவின் சாரம்)

[கச்சி, திரு, முனிசாமி உடையார் B. A. அவர்கள் திரட்டி "சித்தாந்த"த்தில் வெளியிட்டது.]

இச் சிறந்த உலகத்தில் உயர்ந்த மக்கட்பிறப்பெய்திய நமக்கு விருப்பு வெறுப்பு எனுமிரண்டு முண்டு. நாம் விரும்புவதெல்லாம் நன்மையைப் பெறவேண்டுமென்பதற்கே. அப்படி விரும்பப்படும் பொருள்கள் பல உள. முயற்சி செய்தால் அவற்றைப் பெறலாம். முயற்சிசெய்வதற்கு மனம், வாய், உடல் ஆகிய மூன்று கருவிகள் நம்மிடத்துள்ளன. அவற்றில் மனமே சிறந்தது. மனம் ஒரு கருவி. நாம் அதை உடையோம். கருவி உடையானுடைய ஏவற்படி நடக்கவேண்டியதாயிருக்க, நம்மனம் நம் ஏவற்படி கேட்கிறதில்லை. அதற்கு மாறாக மனத்தின் வழியே நாம் செல்கின்றோம். அதனால் நாம் உடையார் என்ற நிலையும், மனம் நமது உடைமைப் பொருள் என்ற நிலையும் போய்விடுகின்றது. உடைமைப் பொருளாகிய மனத்தை நம் ஏவற்படி நடத்தும் நிலைநமக்குவரவில்லை. அந்நிலையைச் சம்பந்தர், திருநாவுக்கரசர் முதலிய பெரியோர்கள் அடைந்திருந்தனர்.

"தாமிடர்ப் பட்டுத் தளிர்போல் தயங்கினும்
மாமனத் தங்கன்பு வைத்தகிலை யாகும்
நீயிடர்ப் பட்டிருந் தென்செய்வாய் நெஞ்சமே
போமிடத் தென்னொடும் போதுகண் டாயே."

என்று திருமூலர், தன் ஏவற்படி நடவாததினால் இடர்ப்பட்ட மனதைப் பார்த் திரக்கங்கொண்டு அது நன்மையடைதற்குத் தான் போமிடத்து வரும்படி அழைக்கிறார். தன்மனதை அவர் எங்கு அழைக்கின்றார் என்று வினவின்,

"அறிவார் அமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிலர்தத் தவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன்கூடல் பேரின்ப மாமே."

என்ற பாட்டில் பேரின்பத்தைக் காட்டுவிக்கவல்ல பெரியாரிடத்தில் சேரத் தன் மனதை அழைக்கின்றார் என்பது விளங்குகின்றது. எனவே, நாம் நன்மையைப் பெறவேண்டின் நம் மனதைப் பெரியாரிடத்தில் செலுத்தல் வேண்டும். பெரியார் மிகுந்த அறிவுடையார்.

"அறிவுடையார் எல்லாமுடையார் அறிவிலார்
என்னுடையரேனு மிலர்."

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்ற திருக்குறட் பாக்களால் பெரியவர்கள் மிகுந்த அறிவுடையவர்கள் என்பதும், பொருளற்றவற்றைப் பொருளாக மதியாது மெய்ப்பொருளைக் காண்பதே சிறந்த அறிவென்பதும் விளங்குகின்றன. மெய்ப்பொருளைக்

கண்டவர்கள் யாரோ அவர்கள் தான் பெரியவர்கள். இதனால் மெய்கண்டாருடைய பெருமை விளங்குகின்றது.

இறைவன் அருளிய வேதத்தில் சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் உதவும்படி சிறிய பொருள்களும் பெரிய பொருள்களும் பேசப்பட்டிருக்கின்றன. சிறியபொருள்கள் தள்ளத்தக்கன; பெரிய பொருள்கள் கொள்ளத்தக்கன. இவ்வேதத்தில் அருமையாகப் பேசப்பட்டிருக்கின்ற பொருள் எதுவோ அதுவே குருவாகத் தோன்றி நந்திக்கு அருள, அந்நந்தி வழியில் வந்தது சிவஞான போதமாகும். அதை இயற்றியவர்தான் மெய்கண்டார். அவர் அந்நூலை நம் தாய்மொழியாகிய தமிழில் வழங்கினார்; வழங்கினதோடு நில்லாமல் அதை மற்றவர்கள் அறியும்படியும் உணர்த்தி, அதன் பயனாக அஞ்ஞானத்தைப் போக்கும்படிச் செய்தவர்.

சிவஞானபோதத்தை மெய்கண்டார் சூத்திரரூபமாக அருளினார். அருகிய எழுத்துக்களினால் பெருகிய பொருளை அறிவிப்பன சூத்திரங்கள். தமிழில் சூத்திர ரூபமாக உள்ள நூல்கள் வெகுசில. அவைகளும் இலக்கண நூல்கள். அறிவு நூல்களில் சூத்திர ரூபமாக உள்ளது சிவஞானபோதமொன்றே.

"சிறிய அடியில் பெரிய மால்வரைப் பொருள் தெரிந்தாங்கு
அறிவு நூல்களின் முடிவெலாம் அகப்படுத் தவற்றின்
நெறியெலாம் விளக்கிய சிவஞான போதத்தைக்
குறிசெய் தீந்தமிழால் உணரா குரவனைப் பணிவாம்".

என்ற செய்யுளால் இவ்வுண்மை பெறப்படுகின்றது.

மெய்கண்டார் காலத்திலேயே இருந்த அருணந்தி சிவாசாரியார் தாம் இயற்றிய இருபா இருபஃதில்,

"மண்ணிடையின் மாக்கள் மல மகற்றும்
வெண்ணெய் நல்லூர் மெய்கண்டார்"

"கண்ணகல் ஞாலத்துக் கதிரவன் தானென
வெண்ணெய்த் தோன்றிய மெய்கண்ட தேவ"

"காரார் கிருகக் கலியாள் வேலைநின்
பேரா இன்பத் திருத்திய பெரும"

என்றமையால் 'மெய்கண்ட தேவர் உலகத்திலுள்ள எல்லா மனிதர்களுடைய மலத்தை அகற்றுகின்றவர், தன்னை எதிர்ப்பட்டாருடைய அஞ்ஞானத்தைக் கதிரவன் தோன்றி இருளை ஒழிப்பதுபோல் போக்குகின்றவர், மேலும் எதிர்ப்படாதவர்களுக்கும் அழியாத இன்பத்தைத் தருகின்றவர்' என்ற உண்மைகள் விளங்குகின்றன. மனவாசகங்கடந்தார் தாம் இயற்றிய உண்மை விளக்கத்தில்,

"பொய்காட்டிப் பொய் அகற்றிப் போதாநந்தப் பொருளாம்
மெய்காட்டும் மெய்கண்டாய்"

என்றபடியால் மெய்கண்டதேவர் தம்மை அடைந்தோர்க்கு தேகாதி பிரபஞ்சம் யாவும்பொய் என்பதைக்காட்டி, அதனால் அப்பொய் அறிவைப் போக்கி மெஞ்ஞானத்தைத் தருகின்றவர் என்பதையும்,

"வித்தகம் மெய்கண்ட தேவர்"



என்றபடியால் அவர் நிறைந்த ஞானத்தை யுடையவர் என்பதையும் விளக்கிக் காட்டினார். மேற்கூறியவாற்றால் மெய்கண்டாருடைய பெருமை விளங்கிற்று.

மெய்கண்ட தேவர் இருந்த காலத்தைப் பற்றிச் சற்றாராய்ந்து அவர் வரலாற்றிற் செல்லல் இக்கால மரபின்படி அவசியமாகும். மெய்கண்டாருடைய மாணவர் அருணந்தி சிவாசாரியார், அவருடைய மாணவர் மறைஞான சம்பந்தர், அவருடைய மாணவர் உமாபதி சிவாசாரியார். உமாபதி சிவாசாரியார் சாலிவாகன சகாப்தம் 1235-ல் இருந்தவர் என்பது அவர் இயற்றிய சங்கற்ப நிராகரணம் என்ற நூலால் தெரிகிறது. இப்போது நடப்பது சாலிவாகன சகாப்தம் 1859. ஆகவே உமாபதி சிவம் இற்றைக்கு 654 ஆண்டுகட்கு முன் இருந்தவராவர். இவருக்குக் குரு பரம்பரையில் மூன்றாவதாக இருந்த மெய்கண்டாருடைய காலம், இற்றைக்கு 685 அல்லது 690 ஆண்டுகட்கு முன்னராம் என முடிவு கட்டலாம்.

நடுநாட்டிலே திருப்பெண்ணாகடம் என்ற ஊரில் அச்சுதகளப்பாளர் என்ற வேளாளர் பிள்ளைப் பேறின்மையால் பல தவங்கள் செய்தும் பலனற்றனவாகிவிடத் தம்குலகுருவாகிய சகலாகம பண்டிதரிடம் சென்று குறையிரந்து நிற்க, அவர் தமிழ் மறையாகிய தேவாரத்தில் கயிறு சாத்திப் பார்க்க,

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே."

என்ற திருஞான சம்பந்தர் தேவாரம் கிடைத்தது. இப்பாட்டின் கருத்தைக் குருவானவர் விளக்கிக்காட்ட அவராணையைச் சிரமேற்கொண்டு அச்சுத களப்பாளர் தம்மனைவியுடன் திருவெண்காடடைந்து முக்குள நீராடிச் சிவபெருமானை வழிபடுவாராயினர். அவ்வழிபாட்டின் பயனாய் அவதரித்த பிள்ளைக்கு அவர்கள், அத்தலத்து இறைவன் பெயராகிய சுவேதவனப் பெருமாள் என்ற பெயரையே பிள்ளைத் திருநாமமாகச் சூட்டினர். பிள்ளை, திருவெண்ணெய் நல்லூரில் அம்மான் வீட்டில் வளர்ந்தவருங் காலத்தில் வயது மூன்றாயிற்று. அக்காலத்தில் ஒருநாள் பரஞ்சோதி முனிவர் ஆகாயவழியாய்ச் செல்லும்போது, செலவு தடைப்பட்டமை கண்டு கீழிறங்கிச் சுவேதனப் பெருமாளின் பக்குவத்தை யறிந்து மெய்ஞ்ஞானத்தை உபதேசித்துக் குழந்தைக்கு மெய்கண்டார் என்னுந் திருநாமத்தையும் சூட்டிச்சென்றனர். மெய்கண்டார் தாம் உபதேச மூலமடைந்த பொருளைப் பொல்லாப் பிள்ளையாரிடம் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து தம்முடைய சீடர்களுக்குமுபதேசித்துச் சிவஞானபோதம் என்றொரு நூலையும் செய்தருளினார்.

சிவஞானபோதம் ஓர் அருஞ்செந் தமிழ்நூல். "உயர் சிவஞான போத" மென்றும், 'யாரும் வெல்லாத சிவஞான போத'மென்றும் அதைத் தக்கோர் மதித்துள்ளார். சிவஞான போதம் என்ற சொற்றொடர் சிவம், ஞானம், போதம் என்னும் மூச்சொற்களால் ஆக்கப்பட்டு இறைவன் அரு

ளால் வரும் அனுபூதிஞானம் அல்லது பரஞானத்தின் வேறாய நூலாராய்ச்சியால் உண்டாம் ஆராய்ச்சிஞானம் அல்லது அபரஞானத்தை உணர்த்தும் நூல் எனும் பொருளைத் தருகின்றது. திருவாதவூரரை யாட்கொள்ள இறைவன் மானுடச் சட்டை தாங்கி ஒருசிவயோகிவேடம் பூண்டு திருப்பெருந்துறையில் வீற்றிருந்தபோது அவர் கையிலிருந்த சுவடி யாதென்று வாதவூரர் கேட்கப் "பொய்ம்மையிலாச் சிவஞான போதம்" என்று இறைவன் அருள, "சிவம் எது? ஞானம் எது? போதம் எது?" என்ற மாணிக்கவாசகர் கேள்விக்கு "நின்ற சிவம் ஒன்று, அதனைத் தேர்தல் ஞானம், ஆராய்ந்து தெளிதல் போதம்" என்று சிவபெருமான் "சிவஞான போதம்" என்ற சொற்றொடருக்கு உரை கூறினர்.

சிவஞானபோதத்தில் விளக்கப்படுவது வேதத்தில் சொல்லப்படும் ஆறுமுடிவுகளில் ஒன்றாகிய சித்தாந்தமாம்.

"வேதத்தின் அந்தமும் மிக்கசித் தாந்தமும்
நாதத்தின் அந்தமும் நற்போ தாந்தமும்
ஓதத்தகு மெட்டி யோகாந்த அந்தமும்
ஆதிக்க லாந்தமும் ஆறந்த மாமே.

என்ற திருமந்திரப்பாட்டு ஆறுவித அந்தங்களை உணர்த்துகின்றது. இதில் சித்தாந்தத்திற்கு அடையாக "மிக்க" என்ற பிரயோகம் நோக்கற்பாலது.

"நித்தம் பரனோ டுயிருற்று நீள்மனஞ்
சத்தமுதல் ஐந்துந் தத்துவத்தால் நீங்கிச்
சுத்த மசுத்தந் தொடராவகை நினைந்
தத்தன் பரன்பால் அடைதல் சித்தாந்தமே"

என்ற செய்யுளால் சித்தாந்த மெதுவென்பது விளங்குகின்றது. சித்தாந்த மென்ற சொல்லுக்கு முடிந்த முடிவு என்பது பொருள். வேதம், உபநிஷத் இவைகளில் கூறப்படும் முடிவான பொருள் சித்தாந்தமாம். இதைப் பின்பற்றி ஒழுகுதலின் பயனை,

"சித்தாந்தத் தேசிவன் முத்திசித் தித்தலால்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தம் செம்பொரு ளாதலால்
சித்தாந்த வேதாந்தம் காட்டுஞ் சிவனையே"

என்ற திருமந்திரச் செய்யுள் ஓதுகின்றது. மேற்கூறியவாற்றால் நவமான வேதத்தின் முடிவு ஞானசித்தாந்தமாகுமென்பதும், உயிர்கள் பாசத்தினின்றும் நீங்கிப் பதியை அடைவதற்கு அதுவே ஒப்பற்ற நெறியாகுமென்பதும் பெற்றாம்.

ஆகமங்களும் புராணங்களும் சித்தாந்தத்தையே வற்புறுத்துகின்றன. உபநிஷத்தின் முடிவு சித்தாந்தம். அது வைதிகம், அவைதிகமன்று என்று மகுடாகமும், சித்தாந்தம் வேதத்தின் சாரம் என்று சுப்ரபேதாகமும், சுருதி சாரம் சித்தாந்தம் என்று வாயுசம்ஹிதையும், ஆகமங்களில் முடிவாகச் சொல்லப்பட்ட பதி, பசு, பாசம் என்ற இரகசியமான பொருளாகிய சித்தாந்தத்தைத் தட்சிணாமூர்த்தி சனகாதி முனிவர்களுக்குச் சொன்னார் என்று வடமொழி ஸ்காந்தமும் கூறுகின்றன. உமாபதிசிவம்



சித்தாந்தத்தை "வேதத்தலைதரு பொருள்" என்றார். குமரகுருபர சுவாமிகளும் சித்தாந்தத்தையே போற்றினர்.

வேதாகமங்களிலும் புராணங்களிலும் வடமொழிப்புலவர்களாலும் தென்மொழிப் புலவர்களாலும் விதந்தோதப்பட்ட சைவ சித்தாந்தத்தை விளக்கவந்த சிவஞானபோதம் பொது, உண்மை என்றிரண்டு அதிகாரங்களால் அமைக்கப்பட்டது. பொதுவதிகாரம் பதிபசுபாசங்களின் பொது இலக்கணத்தையும் உண்மையதிகாரம் அவற்றின் சிறப்பிலக்கணத்தையும் சாற்றுகின்றன. பொது இலக்கணம் தடத்த இலட்சணம் என்றும் சிறப்பிலக்கணம் சொரூப இலட்சணம் என்றும் சொல்லப்படும். ஒரு பொருள் மற்றொன்றோடு கலந்தபோதுள்ள இலட்சணம் தடத்தமாம். வேறொன்றோடு கூடாதபோதுள்ள இலட்சணம் சொரூபமாம். பொது அதிகாரத்தில் முப்பொருள் உண்மை சொல்லப்படுகிறது. ஒரு பொருளைப் பிரமாணத்தாலும் இலட்சணத்தாலும் தெரிந்துகொள்ளலாம். பிரமாணம் பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம் என மூவகைத்து. பிரத்தியட்சம் புறப் புறச் சமயத்தாராகிய உலோகாயதருக்கே உரியதாதலால் அது சிறந்த பிரமாணமன்று. ஆகமப் பிரமாணம் மற்ற சமயத்தாருக்குந் தவிர சைவத்தில் மந்த அறிவுடையோர்களுக்கும் பொருந்தாது. எல்லாராலும் கொள்ளக்கூடியது அனுமானப் பிரமாணமாகும். அனுமானத்தால் கண்டதைக் கொண்டு காணாதது நிச்சயிக்கப்படும். பொதுவதிகாரம் பிரமாண இயல், இலக்கண இயல் என்றிரண்டியல்களை உடைத்தாய்ப் பிரமாண இயல் மூன்று சூத்திரங்களால் கடவுள், உலகம், உயிராகிய முப்பொருள்களின் உண்மையை விளக்கி, இலக்கண இயல் மூன்று சூத்திரங்களால் உயிரின் இலக்கணம், உலகத்தின் இலக்கணம், கடவுளின் இலக்கணம் ஆகியவற்றைக் கூறுகிறது. உண்மை அதிகாரம் சாதனம், பயன் எனு மிரண்டியல்களாலாய், முதலியற்கண் மூன்று சூத்திரங்களால் சாதனம் செய்யுமதிகாரி, சாதனம் செய்யப்படும் பொருள், சாதனம் செய்யு முறை இவற்றை விளக்கி, இரண்டாவதியல் மூன்று சூத்திரங்களால் பாசவிடுதி, ஈசனையடைதல், சீவன் முத்தர் இலக்கணம் ஆகியவற்றைப் பேசுகிறது.

இந்நூல் அமைப்புக்கும் நூற்கலப்புக்கும் ஓர் இயைபுண்டு.

"கல்லால் நிழல்மலை—வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்—நல்லார் புனைவரே"

என்பது நூற்காப்பு. இக்காப்பு பன்னிரண்டு பதங்களாலாய நான்கடிகளையுடைய ஒரு செய்யுள். நூல் பன்னிரண்டு சூத்திரங்களாலாய நான்கியல்களையுடைத் தென்பதைக் காப்புச் செய்யுள் உணர்த்துகின்றது. முதலடியின் கடைச் சொல்லாகிய "மலைவு" என்பதும், இரண்டாவதடியின் முதற் சொல்லாகிய "இல்லார்" என்பதும் "மலைவில்லார்" என்று புணர்ச்சியால் சம்பந்தப்படுவது, நூலின் முதலியலின் கடையும் இரண்டாவதியலின் முதலும் சம்பந்தப்பட்டுள்ளதைக் காட்டுகின்றது. முதலியலின் கடைச் சூத்திரமும் இரண்டாவதியலின் முதற் சூத்திரமும் பசுவைப் பற்றியே பேசுகின்றன.

கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் எனும் நான்கு சாதனங்களுள் கேட்டலும் சிந்தித்தலும் பொது அதிகாரத்தில் ஆறு

சூத்திரங்களாலும், தெளிதலும் நிட்டை கூடலும் உண்மையதிகாரத்தில் ஆறு சூத்திரங்களாலும் விளக்கப்படுகின்றன. எனவே, பொதுஅதிகாரம் விஷயங்களை ஆராய்கின்றவர்களுக்குரிய, தென்பதும் இரண்டதிகாரங்களும் சாதனமுடையார்க்குரிய தென்பதும்பெற்றாம்.

இந்நூல் தமிழில் வழங்கப்பட்டதாதலால் தமிழ் நாடு இதுவழங்கப் படுமெல்லையாகும். ஆனால் இஃது இக்காலத்துப் பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுப் பல தேசங்களிலும் பரவப் பெற்றிருத்தலால், இந்நூற்கு வழங்கு மெல்லை கோலல் அரிது.

வேதாகமங்கள் பொருள்களை ஓரிடத்திற் சொல்வது போல் மற்றோரிடத்திற் சொல்வதில்லை. அவைகளை ஆய்ந்து ஒற்றுமை செய்து காட்டவே சிவஞானபோதம் தோன்றிற்று. பொருள்களெல்லாம் மூன்று பிரிவுகளில் அடங்கும். அவை உலகம், உயிர், கடவுள் என்பனவாம். ஆனால் பல நூல்கள் பல திறமாக அவற்றைக் கூறுகின்றன. சுவாயம்புயம் என்னு மாகமம் சிவம், பதி, பசு, கர்மம், ஆணவம், சுத்தமாயை, அசுத்த மாயை, எனப் பொருள்களை ஏழாகவும், பௌட்கரம் சிவத்தை ஒழித்து ஆறாகவும், பராக்யேயம் பதி, பாசம், ஆணவம், கர்மம், மாயை என ஐந்தாகவும், சர்வஞ் ஞானோத்தரம் சிவம், பதி, பாசம், பசு என நான்காகவும், இரௌரவம், மிருகேந்திரம் ஆகிய ஆகமங்கள் பதி, பசு, பாசம் என மூன்றாகவும் கூறுகின்றன. இவ்வாகமங்கள் அனைத்தும் ஒரே கருத்துடையனவா யிருப்பினும் பொருள்களைப் பலதிறப்படுத்திக் கூறினமையின் அவற்றை ஒற்றுமைப்படுத்திக்காட்ட சிவஞானபோதம் தோன்றிற்று.

நிலையில்லாத பொருள்களின் சம்பந்தமான பிறவிக்கு அஞ்சி நிலைத்த பொருள்களின் சம்பந்தமான இன்பத்தை நுகர விரும்புவோரே இந்நூல் கேட்க அதிகாரியாவர். சரியை, கிரியை, யோக நூல்களைக் கற்ற பிறகு இந்நூலைக் கற்றால் நூற்பொருள் நன்று விளங்கும். அன்றேல் விபரீதமாகுமென்பது பெரியார் துணிபு. இதைக் கற்றலினால் அறியாமை நீங்க ஆராய்ச்சிஞானம் உண்டாகும்.

இனிச் சிவஞான போதம் நிலை நாட்டுவது சுத்தாத்துவிதத்தை.

"பொய் கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித
மெய் கண்ட நாதனருள் மேவுநா ளெந்நாளோ."

என்னுந் தாயுமானார் பாடல் இங்குக் குறிக்கத் தக்கது. சுத்தாத்துவிதம் என்று கூறற்குக் காரணம் சிவாத்வைதம், விசிட்டாத்வைதம், கேவலாத்வைதம் என்பவற்றினின்றும் வேறுபடுத்திக் காட்டற்காம். அத்வைதம் எனும் வடமொழிச் சொல் ந—த்வைதம் எனப் பிரிக்கப்படும். 'ந' என்ற சப்தத்திற்கு "சப்தகல்பத்ருமம்" எனும் வடமொழி நூல் ஆறுவித பொருள்களைக் கூறுகிறது. ஈண்டு வேண்டற்பாலன மூன்றுபொருள்கள். அவை அன்மை, இன்மை, மறுதலையாகும். பிராமண குலத்திற் பிறந்தும் பிறப்பொழுக்கத்தினின்றும் தவறினானை அப்பிராமணன் என்று கூறுமிடத்து ந என்னும் சொல் அன்மைப் பொருளில் வழங்கப்படுகிறது. அப்பிரகாசம், அமலம் என்ற விடத்து அது இன்மைப் பொருளில் வழங்கப்படுகிறது. அநீதி, அதர்மம் என்ற விடத்து அது மறுதலைப் பொருளில் வழங்கப்படுகிறது. ஆதி சங்கரர் அதை இன்மைப் பொருளில்



கொண்டார். மத்வர்கள் மறுதலைப் பொருளில் கொள்கின்றனர். மெய்கண்டார் அன்மைப் பொருளில் வழங்குகின்றார். கடவுளுக்கும் உயிருக்குமுள்ள அத்வைத சம்பந்தத்தை மெய்கண்டார் விளக்கு முறையே சிறந்ததொன்றாகும்.

இரண்டு பொருள்களின் சம்பந்தம் ஐக்கியம், தாதாத்மியம், சமவாயம், சையோகம் எனப் பலவகைப்படும். ஆற்று நீர் கடல் நீரோடு கலத்தல் ஐக்கியமாம். கடவுளும் உயிரும் சம்பந்தப்படுவது இதைப் போல் அன்று. "என்றுந் தெய்வம் தெய்வமே" என்றபடியால் உயிர் கடவுளோடு கூடிக் கடவுளாகாது. ஒரு மலரின் நிறம் அம்மலர் வடிவமாயிருத்தல் தாதான்மியமாம். இது குணகுணி சம்பந்தமாகும். அதாவது குணியின் ரூபமாய்க் குணம் இருத்தல். உயிர் கடவுளின் குணமல்லவாதலாலும், உயிர் ஒரு குணி, கடவுள் ஒரு குணியாதலாலும், குணியும் குணியும் கூடுதல் தாதான்மியம் அல்லவாதலாலும், கடவுளும் உயிரும் சம்பந்தப்படுவது தாதான்மியமன்று. இதையே தார்க்கிகர்கள் சமவாய சம்பந்தமென்பர். சையோகமாவது விரலும் விரலும் கூடுதலாம். ஈண்டு விரல் முழுமையுங் கூடுதலில்லை. கடவுளும் உயிரும் சம்பந்தப்படுதல் இதுவெனின், பூரண வியாபகமுடைய கடவுள் தன்மைக்குக் குறையேற்படுமாதலின் அது சையோகமன்று. உயிர் ஏகதேச வியாபகமுடையதாதலின் அகண்டத்தில் கடவுளோடு முழுமையுங் கூடாது. இனி மெய்கண்டார் கூறும் அத்துவிதம் யாதென்பதாராய்வாம். முற்கூறிய தாதான்மிய சம்பந்தம் இருவகைப்படும். சூரியனும் கிரணமும்போல் ஒரே பொருள் குணியாகவும் குணமாகவுமிருந்து இரண்டாய் நிற்றற்கு ஏதுவாயிருப்பதொன்று. ஈண்டு பிறபொருள்களைப் பார்க்க சூரியகிரணம் இன்றியமையாதெனினும் சூரியனைப்பார்க்க அவனே துணையாயிருப்பதை அறிகிறோம். வேறுபட்ட இரண்டு பொருள்கள் ஒன்றுகூடி இரண்டல்லாத் தன்மையை எய்தல் மற்றொருவித தாதான்மியமாம். தாள், தலை என்ற இரண்டு வேறுபட்ட சொற்கள் புணரும்போது தாடலை என்றாகிறது. இங்கு டகரம் ஒரு எழுத்தன்று. இரண்டு எழுத்துக்கள் ஒன்று சேர்ந்து ஒன்றாகாமலும் இரண்டு மல்லாமலும் நிற்கிறது. இதைப்போல் கடவுள், உயிர் ஆகிய இரண்டு வேறுபட்ட பொருள்கள் ஒன்று கூடும் போது ஒன்றாகாததும் இரண்டல்லாமையுமாகிய நிலையை எய்துகின்றன. இதுவே மெய்கண்டார் கூறும் அத்துவிதமாம்.

மேலும் பாணினிவியாகரணத்திற்கு உரை செய்த பதஞ்சலியார் அகரத்தை அன்மைப் பொருளிலேயே எடுத்தாளுகிறார். த்வைதம், அத்வைதம் என்பன எண்ணுப் பெயர்ச்சொற்கள். வடமொழியில் அ என்பது ஒன்று இரண்டு என்னும் எண்களின்மேல் தவிர மற்ற எண்ணுப் பெயர்கள் மேல் வராது. (அ—ஏகம்—அநேகம்; அ—த்வைதம்—அத்வைதம்) ஒன்று என்பதை உணர்த்த ஏகம் என்ற சொல் இருக்க, இரண்டன்மையை உணர்த்தும் அத்வைதம் என்ற சொல்லை உபயோகிப்பதே கடவுளும் உயிரும் ஒன்றுமல்ல இரண்டுமல்ல என்ற சித்தாந்த உண்மைக்குச் சான்றாகும். ஆனால் ஒன்றே என்று மறைகள் கூறுவது முற்றறிவுடைய பதியை. சிற்றறிவுடைய உயிர்கள் பாசத்தோடு கூடினமையின் கடவுள் ஆகா. உலகமோ அறிவற்றது. ஆயின் கடவுள் இல்லையேல் ஒன்றுமில்லை என்பது அகரஉயிர் இன்றேல் அக்கரங்கள் இன்றாம் என்பது

போலாம். அகரம் மற்ற உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் இயக்குவதுபோல் கடவுள் அடிமைகளாகிய உயிர்களையும் உடைமையாகிய உலகத்தையும் இயக்குகிறார். கடவுள் இன்றேல் உயிரும் உலகமும் இயங்கா.

முதற்சூத்திரத்தில், காணப்படும் உலகைக்கொண்டு காணப்படாத கடவுளை நிச்சயித்து, இவ்வுலகம் அவன் அவள் அது எனும் மூவகைப் பாகுபாடுடையதாய், தோன்றல் இருத்தல் அழிதல் ஆகிய முத்தொழிலுடையதாய், தோன்றுங்கால் தான் ஒடுங்குதற்கு ஏதுவாயிருந்த கடவுளினின்றும் தோன்றுகிறது என்று கூறி, இரண்டாஞ் சூத்திர முதலதிகரணத்தில் உலகத்தைத் தோற்றுவிக்குங்கால் கடவுள் உயிர்களோடு கூடி ஒன்றாயும், இரண்டாயும், ஒன்றிரண்டாயும் இருக்குந்தன்மையை ஆசிரியர் விளக்குகின்றார். உயிரைப்பற்றியுள்ள மும்மலங்களில் ஆணவமலம் பரிபாகமாதற் பொருட்டு சிருட்டியும், கர்மமலம் பரிபாகமாதற் பொருட்டு ஒடுக்கமும், மாயாமலம் பரிபாகமாதற் பொருட்டு இரட்சணையும் ஆகிய முத்தொழிலைக் கடவுள் புரிகிறார். இச் செயல்களைப் புரியும்போது அவர் பதியாகின்றார். இது கடவுளின் தடத்த லட்சணம் அல்லது பொது இயல்பெனப்படும். இத்தொழில்களைச் செய்யும்போது கடவுள் உயிருடன் கூடி நிற்கின்றார். அப்படிக் கூடி நிற்கின்ற நிலை மூன்று விதப்படும். அவை அபேதம், பேதம், பேதாபேதம் என்பனவாம். உயிரும் உடம்பும் கூடியிருக்கும் நிலை அவ்வாறேயாகும். ஒருவன் "என்னை அடித்தான்" என்றபோது உடலைத் தானாகவும், "என் உடம்பு" என்றபோது உடலைத் தன்னின் வேறாகவும், உடலுக்கிட்ட பெயரால் அழைக்கத் தான் செல்லலால் உடலுக்குடனாயும் இருத்தல் இவ்வுண்மையைவிளக்குகிறது. உயிர்கள் உலகில் இருக்க உடலும் உயிரும்போல் அவற்றோடு கலந்து அவையாயிருந்து அபேதமாயும், அவை பொருள்களை அறிய அகரமும் மற்ற உயிரெழுத்துக்களும்போல் வேறாய் பேதமாயும், அவை பொருள்களை அநுபவிக்கப் பண்ணும் இசையும் போலவும், பழமும் சுவையும்போலவும், அறிவுங்கண்ணும்போலவும் உடனாய் பேதாபேதமாயும் கடவுள் இருக்கிறார். ஆகவே, இறைவன் நாமாகவும், நம்மின் வேறாகவும், நம்முடனாகவும் இலரெனில் நாம் இருக்கவும், அறியவும், அநுபவிக்கவும் இயலாதென்பது பெற்றாம். இனி இம்மூன்று நிலைகளையும் ஒரே உதாரணத்தில் விளக்க ஆசிரியர் உருக்கிய அரக்கையும் அதனோடு சேர்த்தணைத்த கற்பொடியையும் காட்டுகிறார். கற்பொடியானது அரக்கோடு கலப்பினால் ஒன்றாயும், பொருண்மையால் வேறாயும், நீக்கமின்மையால் உடனாயும் இருத்தல்போல் முதல்வன் உயிர்களோடு ஒருங்குகூடிநின்று நீக்கமின்றி நிற்றலினால் தானேயாம், உலகேயாம், தானே உலகேயாம்.

ஆசிரியர் கடைசி சூத்திரத்தில் சீவன் முத்தர் இலக்கணங் கூறுகின்றார். இச்சை அறிவு செயல்கள் இறைவனுக்கும் உள, நமக்குமுள, சீவன் முத்தர்க்குமுள. இறைவன் அவைகளை உயிர்கள் காரணமாகச் செலுத்துகின்றான். நாம் நிலையில்லாத அற்ப இன்பத்தை அளிக்கும் உலகப் பொருள்கள் மாட்டுச் செலுத்துகின்றோம். சீவன்முத்தர்களோ தம்மை விட்டுக் கழிந்தமலம் சேராமலிருக்க இச்சையையும், அன்பரோடு கூட அறிவையும், அடியார் வேடத்தையும், ஆலயத்தையும் அரனெனத் தொழச் செயலையும் செலுத்துகின்றனர்.



அவளை யென்றது குந்தியை. 'அவர்......தங்கையையும் தாயையும் நமஸ்கரித்தார்' என்றது அதன் 59-வது அத்தியாயம். அவரென்றது கிருஷ்ணரை. சிவன் மோகனசாத்திரஞ்செய்ததுபோல் யுதிஷ்டிரர், குந்தி, இந்திரன், ஸாந்தீபனி, பீமன், பிராமணர்கள், அக்கினி, தேவர்கள், முனிவர்கள், ஸந்தியை, பலராமர், விராடன், துருபதன், வியாசர், திருதராஷ்டிரன், காந்தாரி, வஸுதேவர், தேவகி ஆகியவர்களெல்லாம் என்னென்ன மோகன சாத்திரங்கள் செய்தார்கள்? அவர்களை யார் வணங்கட்டுமென்று கிருஷ்ணர் வணங்கிக் காட்டினார்? அவர் செய்த அத்தனை வணக்கங்களும் யதார்த்தமா? நாடகமா? யதார்த்தமாயின், அவர் சிவபிரானை வணங்கியது மட்டும் நாடகமாதல் யாங்ஙனம்? நாடகமேயாயின், கிருஷ்ணர் பிறந்து செத்தது வரையிலுள்ள அவர் செய்கல்ளனைத்தையும் ஒன்றும் விடாமல் எடுத்தெழுதி அவற்றுள் இவையிவை நாடகம் இவையிவை யதார்த்தம் என்று பாகுபாடு செய்யப் பூர்வபட்சம் முன்வரவேண்டும். ஆனால் அது கிருஷ்ணரிடங் கண்ட அபகர்ஷங்களையெல்லாம் லீலை யென்றும் உத்கர்ஷங்களையெல்லாம் யதார்த்தமென்றுமே கூறும். அப்படியானால் ராவண கும்பகர்ண கம்ச சிசுபாலனாதியரிடமும் அந்த நியாயத்தை யேற்றி அவர்களையுங் கிருஷ்ணரைப்போற் பரம்பொருள்களென்று ஏன் சொல்லக்கூடாது? அவர்களெல்லாம் ராமகிருஷ்ணரால் வதமாயினரேயெனின் அது அவ்விராவணனாதியர்க்கு ஒரு லீலையாகலாம். அவ்விராமகிருஷ்ணாதியரையும் பரமெனச் சிலர் வணங்கட்டுமென்ற எண்ணத்தோடுதான் அவ்விராவணனாதியர் அவர்கள் கையால் மடிந்தவர்கள்போல் மாயஞ்செய்து கொண்டனரென்றால் இழுக்கொன்றுமில்லை. இம்முட்டுப்பாடுகளை யெல்லாம் யோசிக்கவல்லார், கிருஷ்ணர் தமது தாஸத்தன்மையையும் சிவபிரான் முதலியோரது எஜமானத்தன்மையையும் உணர்ந்து அவ்வணக்கங்களை யதார்த்தத்தாற் செய்தாரென்றே துணிவர். 'நாராயண பரோத்யாதா' என்பது நாராயணமும், 'சிவ ஏகோ த்யேய:' என்பது அதர்வசிகையும் ஆகும்.

## 12. நரஹரி விஜயாத்.

### மானுட மடங்கலை வலிதபக் கோறலின்.

பொருள்:— நரசிங்கத்தை அதன்வலி கெடும்படி அடித்துக் கொல்லுதலாலும் என்பது.

இரணியனென்பவன் ஓரசுரன். அவன் தேவர்களுக்குப் பரம விரோதி. அவர்கள் அவனுக்குப் பயந்தார்கள். விஷ்ணு அவர்களைக் காக்க விரும்பினார். அவரமிசமொன்று இரணியனுக்குப் பிள்ளையாயிற்று. அப்பிள்ளையே பிரகலாதன். அவனைத் தந்தை வெறுத்

தான். அப்பிள்ளையைக்கொல்ல அவ்வசுரன் செய்த சூழ்ச்சிகள் பல. ஒரு சமயம் அவ்விரணியனைக் கொல்ல விஷ்ணு நரசிங்கமானார். அவ்வுருத் தூணில் முளைத்தது. இரணியன் நரசிங்கத்துக்கு இரையானான். அவனிரத்தமும் அதனாற் குடிக்கப்பட்டது. அவ்விரத்த வெறியால் அது மூவுலகங்களையும் பீடித்தது. தேவர்கள் அதனைச் சிவபிரானிடம் முறையிட்டார்கள். அவர் சரபவுருக்கொண்டார். அச்சரபம் அந்நரசிங்கத்தைக் கொன்றது. இக்கதை காஞ்சிப்புராணத்துள்ளது.

'யோ கோரம் வேஷமாஸ்தாய சரபாக்யம் மஹேச்வர: | ந்ருஸிம்ஹம் லோகஹந்தாரம் ஸம்ஜகாந மஹாபல: | ஹரிக்ஹரந்தம் பாதாப்யா மநுயாந்தி ஸுரேச்வரா: | மாவதீ: புருஷம் விஷ்ணும் விக்ரமஸ்வ மஹாநிதி | க்ருபயாந் பகவாந் விஷ்ணும் விததார நகை: கரை: | சர்மாம்பரோமஹாவீரோ வீரபத்ரோ பபூவஹ | | ஸ ஏகோ ருத்ரோ த்யேய:' (பயங்கரமான சரபவேஷந்தாங்கி உலக பீடிதமாயிருந்த நரசிங்கத்தை ஹிம்ஸித்தவரும், பாதங்களால் ஹரியை ஹரிக்கின்றவரும், புருஷரூப விஷ்ணுவை வதஞ் செய்யாமல் தேவரீரது பராக்கிரமத்தை மாத்திரங் காட்டியருளல்வேண்டுமென்று சர்வதேவர்களாலும் மகாராத்திரியிற் பின்றொடர்ந்து பிரார்த்திக்கப்பட்டவரும், கிருபையினால் நரசிங்கத்தின் உடம்பினது தோலை நகங்களாற் கிழித்துரித்தெடுத்து வஸ்திரமாக வணிந்துகொண்டவரும், மஹா பலமுள்ள வீரபத்திர மூர்த்தியானவரும் ஆகிய எவருண்டோ அந்த வுருத்திரரொருவரே தியேயர்), 'யோமத்ஸ்ய கூர்மாதி வராஹ ஸிம்ஹாந் விஷ்ணும் க்ரமந்தம் வாமநமாதி விஷ்ணும் விவிக்லபம் பீட்யமாநம்...தஸ்மை ருத்ராய நமோ அஸ்து' (எவர் விஷ்ணுவையும் விஷ்ணுவினவதாரங்களான மச்சம் கூர்மம் வராகம் நரசிங்கம் முதலியவற்றையும் வாட்டிப் பீடிக்கின்றாரோ அந்த வுருத்திரருக்கு நமஸ்காரம் ஆகுக) என்ற சரபம் அக்கதைக்கு மூலவசனம்.

இனி அக்கதைபற்றிய ஆக்ஷேபசமாதானங்கள் வருமாறு:—

1. ஆ:— 'ஹரம் ஹரந்தமநுயாந்தி தேவா: | விச்வஸ்யேசாநம் வ்ருஷபம் மதீநாம்' (நரசிம்மனைக் கொல்லும்படி சாபரூபமாய் வந்த சிவனைக் கொன்ற ஹரியைத் தேவர்கள் பின் சென்றார்கள்) என்ற வேதவசனத்தால் நரசிம்மமே சரபத்தைக் கொன்றதென்பது விளக்கவில்லையா?

ச:— 'ஹரம் ஹரந்தம்' என்பது பொய்ப்பாடம். 'ஹரிம் ஹரந்தம்' என்ற பாடமே சரியானது. அவ்வுண்மையை நேரில் வேதம் படித்தறிக. மேலும் இந்தப்பாடம் 'ஹரிம் ஹரந்தம் பாதாப்யா மநுயாந்தி ஸுரேச்வரா:' என்று சரபத்திற் பரிவசானமடைகிறது. இதிலுள்ள ஹரிபதம் விட்டுணுவைச் சுட்டுவதோடு நரசிங்கத்தையுஞ் சுட்டும். அதனை விசேடிக்கும் பதமோ ஆண்



டொன்றுமில்லை. ஆனால் சரபத்தைச் சுட்டும் பதம் பல சொற்களால் விசேடிக்கப்பட்டுளது. சரபமே கொலையுண்டதென்பது அச்சுருதிக்குக் கருத்தாயின் அது அப்பறவையை அத்துணை விசேடிக்கவேண்டாம். ஆகவே சரபமே நரசிங்கத்தைக் கொன்றதென்பதுதான் அதன் கருத்து. அது அவ்வாக்கியத்துக்கு 'ஹரியென்னும் நரசிங்கத்தை அரிக்கின்றவராயும் அஷ்டாதசவித்தைகளையும் ஸ்வரூபமாகக் கொண்ட விருஷபஸ்வாமியாயும் ஈசான மூர்த்தியாயும் விளங்குகின்றவராயுமுள்ள சரபேசுவரரைத் தேவர்கள் பின்சென்றார்கள்' என்று நேர்பொருளுரைப்பதாற் கிடக்கும். பூர்வபட்சம் 'ஹரிம் ஹரந்தம்' என்ற பாடத்தையே கொண்டு தன் கருத்தை அதற்குப் பொருளாக்கப் அபார்ப்பதுமுண்டு. துவும் செல்லாதென்பது 'ஹரந்தம் என்னும் ஹரணக் கிரியையினது காரகாகாங்க்ஷையில் விஹிதமான கர்மபதயோஜனைக்கு ஸந்நிஹிதமாகி அநுகூலித்த ஹரிம் என்னும் பதத்தை விட்டு அத்யந்த வியவதானத்திலுள்ள ஈசானம் என்னும் பதத்தை வருவித்துக் கொண்டு அர்த்த கல்பனஞ் செய்தல் தூரான்வயமாக முடிவதால், ஸந்நிதிபங்கதோஷம் பிராப்தமாவதாகப் பண்டிதர் விதப்பர். விஸ்வேசரான சரபமூர்த்தியை நரசிங்கமாகிய விஷ்ணு அழித்தாரென்பதில்(அக்நிநாஸிசேத்)என்றபடி. யோக்கியதாபங்கதோஷமுண்டாவதாகவும், (ஆகாங்க்ஷாயோக்யதா | ஸந்நிமதாம் | பதாநாம் | ஸமூஹோ வாக்யம்) என்னும் சாஸ்திரோக்தவாக்கிய லக்ஷண பங்கதோஷ முண்டாவதாகவும் அறியவேண்டியது. இந்த விசாரத்தால் பூர்வபக்ஷிகள் தமக்காதாரமாகத் தேடிக்கொண்ட தைத்திரிய சுருதியின் யோக்யதை வெட்டவெளியானதால், இனி அவர்களுடைய துன்மார்க்கம் பலிக்கமாட்டாது. இன்னும் விரிக்கிற் பெருகும்' என்று 'கூரேச விஜயபங்கம்' என்ற ஸத்சாத்திரத்தில் ஸ்பஷ்டம். மேலும் பொருள் வெளிப்படையாக விளங்குஞ் சுருதிகட்கேற்பவே பொருள் சிறிதோ பெரிதோ மறைந்து கிடக்குஞ் சுருதிகட்குப் பொருள் காணவேண்டுமென்பது முறை. மேல் மூலவசனம் வெளிப்படையான பொருளையுடைய சுருதி. பூர்வபட்சம் ஆண்டது அத்தகையதன்று. ஆகலின் அம்மூலவசனத்தை அநுசரித்தே அஃதாண்ட வசனமும் சீவிக்கவேண்டுமென்க. இன்னும் நரசிங்கத்தைச் சரபம் கொன்றதென்னும் வாக்கியம் சரபத்திலுள்ளது அப்படியே சரபத்தை நரசிங்கம் கொன்றது மெய்யானால் அவ்வாக்கியம் ந்ருஸிம்ஹ பூர்வ உத்தர தாபிநிகளிற் கிடத்தலே பொருத்தம். அஃதில்லை.

2. ஆ:—விஷ்ணு நரசிங்கமானதும் சிவன் சரபமாகி அவரையெதிர்த்தான். விஷ்ணு நரசிங்க வடிவத்தை மாற்றிக்கண்டபேருண்டமாகிச் சரபத்தை யெதிர்த்தார். சிவன் சரபவடிவத்தை

மாற்றிச் சருவதோமுகமாகிக் கண்டபேருண்டத்தை யெதிர்த்தான். விஷ்ணு கண்டபேருண்ட வடிவை மாற்றிச் சருவதோபத்திரமாகிச் சருவதோமுகத்தை யெதிர்த்துக் கிழித்துவிட்டார்.

ச:— சிங்கத்தைக் கொல்லவல்லது சரபமும், சரபத்தைக் கொல்லவல்லது கண்டபேருண்டமும், கண்டபேருண்டத்தைக் கொல்லவல்லது சருவதோமுகம், சருவதோமுகத்தைக் கொல்லவல்லது சருவதோபத்திரமுமாமென்பதும் சருவதோபத்திரத்தைச் சருவதோமுகமும், சருவதோமுகத்தைக் கண்டபேருண்டமும், கண்டபேருண்டத்தைச் சரபமும், சரபத்தைச் சிங்கமுங் கொல்லமாட்டாவாமென்பதுமே விஷ்ணுவுஞ் சிவபிரானும் அங்ஙன வடிவமாறக் காரணம். சிங்கந் தவிர மற்றவையனைத்தும் பறவைகள். பூர்வபட்சம் நரசிங்கமே சரபத்தை யடித்ததெனமுதலிற் கூறிவிட்டுப் பின்னர்ச் சிவபிரானுக்கும் விஷ்ணுவுக்குஞ் சருவதோபத்திரம்வரை வடிவங் கூறிற்று. இவை முரணல்லவா? அன்றியும் நரசிங்கத்துக்கும் சரபத்துக்கும் உபநிஷத்துக்கள் உள்ளனபோல் கண்டபேருண்டமாதி மற்றை வடிவங்களுக்குச் சுருதிகளில்லை. ஆகையால் அவைகளெல்லாம் கற்பனையேயாமெனக.

---

13\. மாதவே ஸ்த்ரீசரீரே சாஸ்தஸ் ஸம்பாதகத்வாத்.
மாயோன் மகடூஉ வாகிய காலைத்
தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலின்.

பொருள்:— விஷ்ணு பெண் வடிவங்கொண்டபோது அவளைப் புணர்ந்து அவளுக்கு ஹரிஹர புத்திரரென்ற பிள்ளையைக் கொடுத்தவனும் என்பது.

பாற் கடலில் எழுந்த அமுதத்தைத் தேவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும் பொருட்டு விஷ்ணுமோகினியானார். அந்த மோகினியைச் சிவபிரான் புணர்ந்து வயிற்றிற் கருவை யுண்டாக்கினார். அதனால் ஹரிஹர புத்திரர் வெளிப்பட்டார். இக்கதை கந்தபுராணத்துள்ளது.

'ருத்ராத் ப்ரவர்ததே பீஜம் பீஜயோநிர்ஜநார்தந:' (உருத்திரமூர்த்தி பீஜமெனவும் அந்தப் பீஜத்துக்கு யோநி ஜநார்த்தனராகிய விஷ்ணுவெனவும் சொல்லப்படுகிறார்கள்) என்ற ருத்ரஹ்ருதயம் அக்கதைக்கு மூலவசனம்.

இனி அக்கதை பற்றிய ஆக்ஷேப சமாதானங்கள் வருமாறு:—

1\. ஆ:—விஷ்ணுமோகினியானார். சிவன் அம்மோகினியைக் கண்டான். அவனுக்குக் காமமுண்டாயிற்று. அதனால் அவன்

186959

# செய்தித்திரட்டு.

திருநணா:— பவானிமுக்கூடல் சங்கமுகப் பெருமானுக்கு மார்கழி ௨௳ தொடங்கி மூன்று நாட்கள் அர்த்தசாம வேளைகளில் ஏகாதசருத்ர செபம் செய்து திருமஞ்சனஞ்திகளை (கோசிருங்கம்) தாராபாத்திரம் சேர்த்து ஐந்துதாரையாக மகாபிடேகமும் மகாலங்காரமும் வில்வம் நாகலிங்காதிய விசேடபத்திர புட்பங்களால்ருத்ரத்ருதசதார்ச்சனை தூபதீபவர்க்கான்னநெவேதன மகாதீபாராதனங்களும் ஆரிய வேத தமிழ்வேத ஆகமோபசாரங்களும் செய்து சயனாலயப் பிரவேச திருவாராதனை செய்து பிரஸாத வினியோகம் செய்யப்பெற்றது. ஸ்தல ஆசாரிய சிவஸ்ரீ சுப்பிரமணிய குருசாமியாருடன் சிவஸ்ரீ ப. சு. நடேசக் குருக்களவர்களும் சிரத்தையாக நடாத்தினர் திருவருள் சுரப்பதாக.

மாற்றூர்:— தனவணிக நகரத்தார்களின் ஒன்பது கோயில்களுள் ஒன்றான மாற்றூர்க்கோயிலில் ஸ்ரீ பெரியநாகி சமேத ஐஞ்ஞூற்றீசர்க்கு மாசி மஹோத்ஸவம் வழக்கம்போல மாண்புடன் நடைபெற்றது. சங்கீதக்கச்சேரிகளும் நகரத்தார்களுக்கு விருந்துபசாரணைகளும் சிறப்பாகச் செய்யப்பெற்றன. திவ்யாலங்காரங்களுடன் ஐம்பெருங் கடவுளர் திருவுலாப்பவனி கண்டு சிவநேசச் செல்வர்கள் இன்புற்றனர்.

தேர்தல்:— சட்டசபைத் தானத்திற்கு இராமநாதபுரம் ஜில்லா திருப்புத்தூர்த் தாலுகாவின் அபேக்ஷகராக நின்ற பூலாங்குரிச்சி திருவாளர், ராம. ப. வ. இராமசாமி செட்டியாரவர்களின் குமாரர் வள்ளியப்பா வெற்றியுற்றனர். போட்டிக்கு நின்ற சிதம்பரம் பிள்ளை, கற்பூரசுந்தர பாண்டியர் என்னும் இருவரும் தங்கட்குப்போதிய ஆதரவு கிடைக்காதென்றுகருதி யாதொரு முயற்சியையும் மேற்கொண்டிலர் போலும். வள்ளியப்பா அவர்களின் வெற்றிகொண்டாடப்படுகிறது. நாட்டுக்கு வேண்டும் நலம் புரிந்து நன்மதிப்புறுவாராக.

விருத்தாசலம்:—இது காசி க்ஷேத்திரத்திலும் விசேடமுடையதாக விருத்தகாசி என வழங்கப்பெறுவது. மூவர் தேவாரமும் தலபுராணமும் பலவேறு பிரபந்தங்களும் இத்திருத்தலச் சிறப்பையும் மூர்த்திகளின் பிரபாவத்தையும் மணிமுத்தாநதி யாதிய திவ்ய தீர்த்தங்களின் மகிமையையும்விகசிதமாகக்கூறும் மேம்பாடுடையது. தங்கண்வந்திறக்கும் சராசரங்களை அம்மை திருக்கரத்தால் தடவித் துகிலால் வீச இறைவர் தம்மடியிற் கிடத்தித் தாரகப் பிரமோபதேசஞ் செய்து சாரூபம் தரும் பெற்றியுடையது. இத்தகு சிறப்பின் உத்தமோத்தமமாகிய இத்திருத்தலத்தில் ஸ்ரீ விருத்தாம்பிகா பாலாம்பிகா சமேத விருத்தகிரீஸ்வரருக்கு திருப்பணிச் செல்வர் பரம்பரையினரான வயிநாகரம் குடும்பத்தினரால் திருக்கோயில் திருப்பணியும் செவ்விதிற் செய்யப்பெற்றுள்ளது. இத்தேவாலயத்தில் மாசி மகோற்சவம் மாண்புடன் கொண்டாடப்பெறுகிறது. இவ்வாண்டில் மாசி ௫௳ தொடங்கி ௧௬௳ வரை மிக விமரிசையாகச் செய்யப்பெற்றது. தேவாலய பூஜையையும் திருவிழாவையும் சீர்பெற நடாத்தும் தருமபரிபாலகர்களின் திறன் போற்றுந்தகையது. தருமபரிபாலகராகிய திருவாளர்கள், R. சண்முகம் பிள்ளை; M. P. ஹரிஹரதாஸ் முதலியார்; அ. வேங்கடாசலஞ் செட்டியார் ஆகியவர்கள்.

# சிவநேசன்.

**விளம்பரம்:—** ஸ்ரீமத் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கள் சென்ற ஐம்பது வருஷங்களுக்கு மேலாக அரிய பல தமிழ் நூல்களை வெளியிட்டு வருவதைத் தமிழ் நாட்டினர் நன்கறிவார்கள். பல இடங்களில் அலைந்து தேடித் தொகுத்த ஏடுகள் பலவற்றைப் பிரதி செய்து ஆராய்ந்து பதிப்பித்தற்குரிய நிலையில் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அவற்றுள் சில பிரபந்தங்களைச் சில வருஷங்களாக மாதப்பத்திரிகைகள் சிலவற்றில் வெளியிட்டு வருவதில் ஒவ்வொரு நூலும் முடியப் பல மாதங்கள் ஆவதால் அத்தகைய சிறு நூல்களை ஒன்றன்பின் ஒன்றாக விரைவில் வெளியிட்டு முடிக்கவேண்டுமென்று பல அன்பர்கள் அடிக்கடி தூண்டி வருகிறார்கள். அதற்குத் தக்க ஆதரவுகிடைக்குமாயின் மாதந்தோறும் ஒரு நூலுக்குக் குறையாமல் வெளியிடலாமென்று ஐயரவர்கள் எண்ணுகிறார்கள். அவர்களுடைய நூற்பதிப்பு முறை தமிழுலகம் நன்கறிந்ததே.

இங்ஙனம் வெளியிடப்பெறும் நூல்களையெல்லாம் வாங்கிக்கொள்வதாக 500-க்குக் குறைவில்லாத அன்பர்கள் உறுதிகூறி முன்பணமாக ஒரு ரூபாய் வீதம் அனுப்பி உதவுவார்களாயின், இம்முயற்சி எளிதில் நிறைவேறும். இத்தகைய உதவி செய்பவர்களுக்கு மட்டும், மாதந்தோறும் வெளியாகும் நூலின் விலையில் நூற்றுக்கு இருபத்தைந்து வீதம் குறைத்துக் கொடுக்கப்படும். புத்தகத்தின் விலை இயன்றவரையில் சகாயமாகவே அமையும்.

இப்போது வெளியிடற்குச்சித்தமாயுள்ள நூல்கள்: கோவைகள், உலாக்கள், தூதுகள், பிள்ளைத்தமிழ்கள், குறவஞ்சிகள், பள்ளுப் பிரபந்தங்கள், சிலேடை வெண்பாக்கள், இரட்டை மணிமாலைகள், கலம்பகங்கள், சதகங்கள், சிறு காப்பியங்கள், தலபுராணங்கள் முதலியன.

எல்லாம் அனுகூலமாக அமையுமாயின் முதல் வெளியீடு வருகிற ஈசுவர வருஷம் சித்திரை மாத முதலில் பிரசுரிக்கப்படும்.

இந்த ஏற்பாட்டை அங்கீகரிக்கும் அன்பர்கள் மேலே சொன்னபடி கீழே கண்ட விலாசத்துக்கு 1937-ஆம் ௵ மார்ச்சு மாதம் 15-ஆம் தேதிக்குள் முன்பணமனுப்பித் தங்கள் பெயர்களைப்பதிவுசெய்துகொள்ளுமாறு வேண்டுகிறேன். மானேஜர்: 'தியாகராஜ விலாசம்' 67, பிள்ளையார் கோயில் தெரு, திருவேட்டீசுவரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை.

**முனையூர்:—** ஆரம்ப ஆசிரியர் சங்கம் 13—2—37 காலை 9-மணிக்கு தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் குப்புசாமி ஐயர் தலைமையிற் கூடியது. ஒரு ஆசிரியர் தமிழின் சில நுட்பங்களைப் பேசினார். விவாதங்கள் ஏற்பட்டு முடிவடைந்தது. கண்டாச்சிபுரம் தலைமையாசிரியர் ஸ்ரீமான் கோதண்டராமையர் மாணவர்களுக்கு விளையாடுமிடம் அவசியமென்பதை விளக்கினர்.


"சிவநேசன்" ஆண்டுத்தேகை விவரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ | 2--4--0 | அதற்கு மூலதனம் | ரூ | 30--0--0 |
| அயல்நாட்டிற்கு | ரூ | 3--0--0 | அதற்கு மூலதனம் | ரூ | 40--0--0 |

தனிப்பிரதி அணா 0—3—0

விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4—0—0

நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8—0—0

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர்
ராம. ஆ. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றிவெளியிடப்பெற்றது.